Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 13 | செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :189 வைகாசி 23ஆம் நாள் வெள்ளிக்கிழமை 05 ஜூன் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

கொரோனாவிலிருந்து எம்மை நாமே பாதுகாப்போம்




தடிமன், இருமல், தொண்டைநோ மற்றும் காய்ச்சல் அறிகுறிகள் காணப்படின் பயணம் செய்வதையும் பொது இடங்களுக்கள்வேலைத்தளங்களிற்கு செல்வதையும் தவிர்ப்போம். வைத்திய ஆலோசனையைப் பெறுவோம்.

தகவல்: வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம்

## வடக்கு, கிழக்கும் பௌத்த பூமி இங்கு இராணுவமே பாதுகாப்பு!

*தமிழர்கள் புலம்புவதில் பயனில்லை என்கிறார் ஞானசாரர்*



கொழும்பு, ஜூன் 5
'வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழரின் தாயகம் அல்ல. இதுவும் பௌத்த சிங்களவர்களின் பூமி தான். அதாவது ஒட்டுமொத்த இலங்கையும் பௌத்த சிங்கள நாடு. தமிழர்கள் இதை உணர்ந்து கொள்ள வேண்டும். அதைவிடுத்துப் புலம்பிக்கொண்டிருப்பதில் எந்தப் பயனும் இல்லை.'
இவ்வாறு பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

02 ➤

## ஹெரோய்னோடு ஐந்து பேர் கைது!


யாழ்ப்பாணம், ஜூன் 5
உயிர்க்கொல்லி போதைப்பொருளான ஹெரோய்னை உடமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் 5 பேர் அச்சுவேலி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அச்சுவேலி பத்தைமேனி பகுதியில் நேற்று மாலை குறித்த சந்தேகநபர்கள் ஐவரும் கைதுசெய்யப்பட்டனர்.
சந்தேகநபர்

06 ➤

## வாக்களிப்பு ஒத்திகை ஞாயிறன்று

கொழும்பு, ஜூன் 5
பொதுத்தேர்தலை நடத்துவதற்கான வாக்களிப்பு ஒத்திகை நிகழ்வு எதிர்வரும் ஜூன் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் இடம்பெறவுள்ளது. இந்

02 ➤



*வடக்கில் கண்டறியப்பட்ட*

## வெட்டுக்கிளிகள் ஆபத்தானவையல்ல

*விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜூன் 5
வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இனம் காணப்பட்ட வெட்டுக்கிளிகள் ஆபத்தை ஏற்படுத்தக் கூடியவையாக காணப்படவில்லை என்று கிளிநொச்சியில் அமைந்துள்ள பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையப் பணிப்பா

02 ➤

தேர்தலை எப்போது நடத்துவது?

## உலக சுகாதார நிறுவனத்தின் பரிந்துரையைப் பெற முடிவு!

யாழ்ப்பாணம், ஜூன் 5
நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பில் உலக சுகாதார நிறுவனத்தின் பரிந்துரையையும், ஆலோசனையையும் பெற்றுக்கொள்வதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக அறியமுடிகின்றது. மேலும் சுகாதாரத் துறையின் பல்வேறு தரப்பினரினதும் ஆலோசனையைப் பெற்ற பின்னரே தேர்தல் திகதியையும் தீர்மானிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

02 ➤

## அரச சேவையாளர்கள் இராணுவப் பிடிக்குள்!!

*ஜனாதிபதியின் வர்த்தமானிக்கு எதிராக சட்டநடவடிக்கை என்கிறது சஜித் அணி*

கொழும்பு, ஜூன் 5
சுயாதீனமாக இயங்க வேண்டிய அரச சேவையும் இன்று இராணுவத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. இது பயங்கரமானதொரு நிலையாகும். இதற்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதுபற்றி ஆராயப்பட்டுவருகின்றது. இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி

06 ➤

## ஓகஸ்ட் மாதத்துக்குள் பொதுத்தேர்தல் உறுதி

மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 5
நாடாளுமன்றத் தேர்தல் எக்காரணம் கொண்டும் ஓகஸ்ட் மாதத்துக்குப் பின் செல்லாது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.
'ஓகஸ்ட் மாதத்தை நாம் மிஞ்ச முடியாது. நாங்கள் அதை நீதிமன்றத்தில் கூறியுள்

02 ➤

மனவளர்ச்சி குறைந்த

## முஸ்லிம் சிறுவனை தாக்கிய பொலிஸ்!

கொழும்பு, ஜூன் 5
ஓட்டிசம் நோயால் பாதிக்கப்பட்ட, உள வளர்ச்சி குன்றிய 14 வயதான முஸ்லிம் சிறுவன் ஒருவர், ஊரடங்கு உத்தரவை மீறியதாக கடுமையாக பொலிஸாரால் தாக்கப்பட்டுள்ளார். மே 25 ஆம் திகதி நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறுவனின் காயங்கள் அடங்கிய சி.சி.ரி.வி காட்சிகளை முன்னாள் எம்.பி அலிசாஹிர் மௌலானா

02 ➤

## கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரான நடவடிக்கை இலங்கையில் தீவிரம்

*ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கவலை*

கொழும்பு, ஜூன் 5
தற்போதைய சூழ்நிலையில் இலங்கை உட்பட பல ஆசிய நாடுகளில் கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரான நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செலே பசெலெட் கவலை வெளியிட்டுள்ளார்.
கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்குவதற்குப் போலியான செய்திகள் மற்றும் இணைய ஊடகங்கள் தொடர்

02 ➤

கிளிநொச்சியில்

## உழவியந்திரத்திலிருந்து வீழ்ந்தவர் உயிரிழப்பு

*30 கோழிகளும் கூண்டோடு நசிந்து மாண்டன*

கிளிநொச்சி, ஜூன் 5
கிளிநொச்சி புதுமுறிப்பு பகுதியில் உழவு இயந்திரத்தின் மட்காட்டில் இருந்து பயணித்தவர் தவறி சில்லுக்குள் விழுந்த நிலையில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்

02 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ ஆட்சி, பௌத்த மயமாக்கல் கோத்தாபயவின் சர்வாதிகாரத்துக்கு எதிராகக் கூட்டமைப்பு போர்க்கொடி

*சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்து விரைவில் காட்டமான அறிக்கை வரும் என்கிறார் சம்பந்தன்*

கொழும்பு, ஜூன் 5

'பாதுகாப்பு என்ற பெயரில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இராணுவ ஆட்சியையும், பௌத்த மயமாக்கலையும் பகிரங்கமாக அரங்கேற்றி வருகின்றார். இதற்கு எதிராக எமது வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். ராஜபக்ச அரசின் இந்த படுமோசமான செயல்களைக் கண்டித்து சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் காட்டமான அறிக்கையை விரைவில் நாம் வெளியிடவுள்ளோம்' இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்று 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.

பாதுகாப்பான நாடு, ஒழுக்கமான, நீதியான, சட்டத்தை மதிக்கும் சமூகம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதி செயலணியை ஜனாதிபதி உருவாக்கியுள்ளார். அதில் முந்நாள், இந்நாள் முப்படை மற்றும் பொலிஸ் அதிகாரிகளை மாத்திரம் உள்ளடக்கிய 13 பேரை ஜனாதிபதி நியமித்துள்ளார். அதேவேளை, கிழக்கு மாகாணத்தின் தொல்பொருள் இடங்களை அடையாளம் காண்பதற்கும் பாதுகாப்பதற்கும் 11 பேர் கொண்ட ஜனாதிபதி செயலணியை ஜனாதிபதி உருவாக்கியுள்ளார். அதிலும் பௌத்த மதம் சார்ந்த பிக்குகள், படை அதிகாரி மற்றும் பொலிஸ் அதிகாரி உள்ளடங்கலாக 11 சிங்களவர்களை ஜனாதிபதி நியமித்துள்ளார். ஒரு தமிழரோ, ஒரு முஸ்லிமோ இல்லாமல் இந்தச் செயலணியை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ உருவாக்கியுள்ளார்.

இதற்கு எதிராக எதிர்க்கட்சிகளும், சிவில் அமைப்புகளும் கடும் எதிர்ப்புகளையும் கண்டனங்களையும் தெரிவித்து வருகின்றன. அந்தவகையில், ஜனாதிபதி கோத்தாபயவின் இந்த சர்வாதிகார ஆட்சி முறைக்கு எதிராக சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் காட்டமான அறிக்கையை வெளியிடவுள்ளது - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-22)

பட்டுள்ளது. (ஒ.5)

## ஓகஸ்ட்…

ளோம். தேவைப்பட்டால் 9 வார காலக்கெடுவை குறைக்க முடியும். எனவே, நாடாளுமன்றத் தேர்தல் ஜூலை அல்லது ஓகஸ்ட் மாதங்களில் நடத்தப்பட வேண்டும்' எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஓகஸ்ட் 8 அல்லது ஓகஸ்ட் 15 ஆகிய திகதிகளில் ஒன்றில் தேர்தல் நடத்தப்படலாம் என்று கணித்துள்ள செய்திகளுக்கு அவர் பதிலளிக்கும்போது, ஆணையம் இன்னும் அந்தத் திகதிகள் குறித்து விவாதிக்கவில்லை என்றும், அத்தகைய யூகங்கள் சரியானவை என்று கூற விரும்பவில்லை என்றும் அவர் கூறினார்.

தேர்தல் ஜூலை அல்லது ஓகஸ்ட் மாதங்களில் நடைபெறும் என்று நினைப்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று தெரிவித்த அவர், இருப்பினும், அது ஜூலை மாதத்தில் நடைபெறும் என்பதை உறுதிப்படுத்த மறுத்தார். ஆனால், ஓகஸ்ட் மாதத்தைத் தாண்ட முடியாது என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், பொதுத் தேர்தலுக்கான திகதியைத் தீர்மானிக்க தேர்தல்கள் ஆணைக்குழு திங்கட்கிழமை (ஜூன் 8) விசேட கூட்டத்தை நடத்தவுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பொதுத்தேர்தலை நடத்துவது தொடர்பான சுகாதார வழிகாட்டுதல்கள் நேற்றுமுன்தினம் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-22)

## உழவியந்திரத்தி….

துள்ளார். கட்டுப்பாட்டை இழந்த உழவு இயந்திரம் வீடொன்றின் வேலியை உடைத்துக்கொண்டு கோழிக் கூட்டின் மீது மோதியுள்ளது. இதன்போது கூட்டிலிருந்த 30 கோழிகளும் இறந்துள்ளன.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

உழவு இயந்திரம் ஒன்றில் சாரதியும், உழவியந்திர 'மட்கார்ட்டில்' மற்றொருவரும் பயணித்துள்ளனர். இதன்போது 'மர்ட்கார்ட்டில்' இருந்து பயணித்தவர் தவறி கீழே விழுந்து சில்லுக்குள் சிக்கியுள்ளார். இதனையடுத்து கட்டுப்பாட்டை இழந்த உழவு இயந்திரம் வேலியை உடைத்துக்கொண்டு வீட்டு வளவுக்குள் நுழைந்தது. அங்கிருந்த கோழிக் கூட்டின் மீது மோதி நின்றுள்ளது. இதனால் முப்பது கோழிகளும் உயிரிழந்துள்ளன. உழவு இயந்திரத்தின் சாரதி அங்கிருந்து தப்பி ஓடியுள்ளார். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் உழவு இயந்திரத்தைக் கைப்பற்றினர்.

மேலும் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் உயிரிழந்தவர் 8ஆம் வாய்க்கால் பகுதியைச் சேர்ந்த நல்லதம்பி யோகேஸ்வரன் (வயது-41) என்ற இரு பிள்ளைகளின் தந்தை என அடையாளம் காணப்பட்டுள்ளார். தப்பி ஓடிய சாரதியை கைது செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-ஒ.5)

## வடக்கு…

'வடக்கு, கிழக்கை நாம் பாதுகாக்க வேண்டுமெனில் இங்கு இராணுவத்தைத்தான் நிலைநிறுத்த வேண்டும். அவர்களின் நேரடிக் கண்காணிப்பில்தான் அனைத்துச் செயற்பாடுகளும் நடைபெறும்' எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சியை நாம் வரவேற்கின்றோம். பெரும்பான்மை பௌத்த சிங்களவர்களின் வாக்குகளினாலேயே அவர் நாட்டின் தலைவாராகத் தெரிவுசெய்யப்பட்டார். இந்தநிலையில் அவரின் ஆட்சியை விமர்சிப்பதற்குத் தமிழர்களுக்கு எந்த அருகதையும் இல்லை.

நீதியின் வழியிலும், அரசமைப்பை மதித்தும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச செயற்படுகின்றார். இதை நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பும் உறுதிப்படுத்தியுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் தனிப் பௌத்த சிங்களத் தலைவரை நாம் தெரிவு செய்தது போல் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலிலும் தனிப் பௌத்த சிங்கள பெரும்பான்மை அரசை நாம் நிறுவுவோம். எனவே, தமிழர்கள் விரும்பினால் எமது கொள்கைகளை ஏற்று எம்முடன் இணைந்து பயணிக்கலாம்' -என்றார். (ம-22)

## உலக…

தேர்தல் திகதி மற்றும் நாடாளுமன்றக் கலைப்பைச் சவாலுக்கு உட்படுத்திய மனுக்களை உயர் நீதிமன்றம் விசாரணைக்கே ஏற்றுக் கொள்ளாமல் தள்ளுபடி செய்தமையடுத்து தேர்தலை நடத்துவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது.

கொரோனா அச்சம் நிலவுகின்ற சூழலில், உலக சுகாதார நிறுவனத்தின் பரிந்துரையையும், ஆலோசனையையும் பெற்றே தேர்தலை நடத்த வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் முன்வைத்த கோரிக்கை, தேர்தல்கள் ஆணைக்குழுவின் 'தவிசாளர் மற்றும் உறுப்பினர் அபயசேகர ஆகியோரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதற்கு அமைவாக உலக சுகாதார நிறுவனத்தின் பரிந்துரை மற்றும் ஆலோச்னையைப் பெற்றுக் கொள்ள முடிவு செய்யப்

## கருத்துச்…

பான சட்டங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொவிட் 19 காரணமாக பல நாடுகளில் தணிக்கைகள் மேலும் இறுக்கமாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள மிச்செலே பச்செலெட் அரசை விமர்சிப்பவர்கள் கண்மூடித்தனமாக கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்படுகின்றனர். கொரோனா வைரஸ் குறித்த தகவல்களை தங்கள் கருத்துக்களாக வெளியிட்டமைக்காக அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அதிருப்தியை வெளியிட்டமைக்காக பத்திரிகை அல்லது சமூக ஊடகங்கள் மூலம் பிழையான தகவல்களை வெளியிட்டனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் இலங்கை, பங்களாதேஷ், கம்போடியா, சீனா, இந்தியா உட்பட ஆகிய நாடுகளில் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் பதில் பொலிஸ்மா அதிபர் கொரோனா வைரஸ் தொடர்பிலான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளை விமர்சிப்பவர்கள் அல்லது சிறிய குறைபாடுகளை சுட்டிக்காட்டுபவர்களை கைதுசெய்யப் போவதாக மிரட்டினார்.

போலியான அல்லது தீங்குவிளைவிக்கும் செய்திகளைப் பரப்புபவர்களையும் கைது செய்யப்போவதாக அவர் எச்சரித்தார். அதிகாரிகளை அல்லது கொள்கைகளை விமர்சிப்பதற்காக கைது செய்வது என்பது அரசமைப்புக்கு எதிரான நடவடிக்கை என்று இலங்கை மனித உரிமை ஆணைக்குழு பொலிஸுக்கு எழுதிய கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது எனவும் ஐ.நா மனித உரிமை ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ம-ஒ.5)

## முஸ்லிம்…

நேற்று வெளியிட்டுள்ளார். இதனையடுத்து இந்தச் சம்பவம் தொடர்பில் முழு அளவிலான விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதாக களுத்துறைக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

'ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்ட தாரிக் அஹமட் என்ற சிறுவன் 4 வயதிலிருந்தே மன இறுக்கத்தில் இருப்பது கண்டறியப்பட்டு சிகிச்சைபெற்று வருகிறார். சம்பவதினம் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருப்பதை அறியாத குறித்த சிறுவன் தர்கா நகருக்குள் நுழைந்துள்ளார். ஊரடங்கு உத்தரவை மீறியதாக சிறுவன் மீது குற்றம் சுமத்திய பொலிஸார் அவரைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

அதன் பின்னர் சிறுவன் நாகொட மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டதோடு அங்கிருந்த சட்ட வைத்திய அதிகாரி குறித்த சிறுவனையும் அவனது தந்தையாரையும் இனவாதத்தைத் தூண்டும் வார்த்தைகளால் திட்டியுள்ளார் என்றும் கூறப்படுகின்றது. அதன் பின்னர் அங்கொட மருத்துவமனையிலேயே சிறுவனுக்கு முழுமையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

கொரோனாவின் பிடியில் நாடே தத்தளித்துக் கொண்டிருக்கும் போதுகூட இனத்துவேசத்தோடு, மனவளர்ச்சி குன்றிய சிறுவனைப் பொலிஸார் தாக்கிய சம்பவம் பெரும் அதிர்ச்சியை உண்டாக்கியுள்ளது. இந்தச் சம்பவத்தை கண்டித்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான நாமல் ராஜபக்ஷ ருவிட்டரில் பதிவிட்டுள்ளார். (அ)

## வெட்டுக்கிளிகள்…

ளர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகின் பல நாடுகளில் வெட்டுக்கிளியின் தாக்கம் காணப்படுவதோடு இந்தியாவிலும் தற்போது அதன் தாக்கம் அதிகரித்துள்ளது. இந்த நிலையில் இலங்கையிலும் வெட்டுக்கிளிகளின் தாக்கம் உண்டா என்று விவசாயிகள் சந்தேகம் கொள்வது தொடர்பில் விவசாயத் திணைக்களம் கவனத்திலெடுத்துள்ளது.

இந்த நிலையில் வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தலா ஒரு இடம்வீதம் மூன்று இடங்களில் வெட்டுக்கிளிகள் இனங்காணப்பட்டதாக தகவல்கள் எமக்கு கிடைத்தன. எமது நிலைய பூச்சியியல் ஆராய்ச்சியாளர் நேரில் சென்று நிலைமைகளை அவதானித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஓர் சுண்டங்கத்தரி மரத்தில் இனங்காணப்பட்ட வெட்டுக்கிளிகள் அனைத்தும் முற்கூட்டியே எரிக்கப்பட்டுவிட்டன. கிளிநொச்சியின் வட்டக்கச்சி பிரதேசத்திலும் வவுனியா மாவட்டத்தின் கோவில்புளியங்குளத்திலும் அடையாளம் காணப்பட்ட வெட்டுக்கிளிகள் மிகச் சொற்பமானவை. அங்கு இனங்காணப்பட்ட வெட்டுக்கிளிகள் எந்தவொரு ஆபத்தும் அற்றவை என்று உறுதி செய்யப்பட்டுள்ளது - என்றார். (ம-ஒ.5,105)

## வாக்களிப்பு…

தத் தகவலை தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

'சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வழங்கப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமைய பொதுத்தேர்தல் வாக்களிப்பை முன்னெடுப்பது தொடர்பில் இந்த ஒத்திகை இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை பொதுத்தேர்தலுக்கான திகதியை நிர்ணயம் செய்வதற்கு முன்னர் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் தேர்தல் அதிகாரிகள் மற்றும் சுகாதார அதிகாரிகளால் இந்த ஒத்திகை முன்னெடுக்கப்படுகிறது' என்றும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் கூறினார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜீவன் தொண்டமான் வேட்புமனுவில் ஒப்பம்

கொழும்பு, ஜூன் 5
பொதுத்தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் இளைஞர் அணி பொதுச்செயலர் ஜீவன் தொண்டமான் நேற்று மாலை 5 மணிக்கு கையொப்பமிட்டார்.
கொட்டகலையிலுள்ள தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் (சி.எல்.எவ்) நடைபெற்ற இதற்கான நிகழ்வில் இ.தொ.காவின் பொதுச்செயலாளர் அனுஷியா சிவராஜா, உப தலைவர் செந்தில் தொண்டமான், பொருளாளர் மருதபாண்டி ரமேஷ், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜதுரை உட்பட இ.தொ.காவின் உயர்மட்ட பிரமுகர்கள் பங்கேற்றிருந்தனர்.
பொதுத்தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் மொட்டு சின்னத்தில் நுவரெலியா மாவட்டத்தில் களமிறங்கியிருந்த தலைமை வேட்பாளர் ஆறுமுகன் தொண்டமான் கடந்த 26ஆம் திகதி உயிரிழந்தார். இதனால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு அவரின் மகனான ஜீவன் தொண்டமானை நியமிக்குமாறு கடந்த 27ஆம் திகதி பொதுமக்கள் முன்னணியின் தலைவர் பிரதமர் மஹிந்த ராஜபக்சவை சந்தித்து இ.தொ.கா பிரமுகர்கள் கோரிக்கை விடுத்தனர். பொதுச்செயலாளரின் கையொப்பத்துடனான கடிதத்தையும் கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# மலக்குழிக்குள் வெடிபொருள்

கொடிகாமம், ஜூன் 5
கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலை, வேம்பிராய்ச் சந்திக்கு அருகாமையில் தேவாலயக் கட்டுமானப் பணியின்போது வெடிபொருட்கள் மீட்கப்பட் டுள்ளன.
மலக்குழி அகழப்பட்டபோது குறித்த குழிக்குள் இருந்து வெடிபொருட்கள் தென்பட்டுள்ளன, கொடிகாமம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு, நீதிமன்ற உத்தரவைப் பெற்று நாளை வெடிபொருட்கள் மீட்கும் பணி இடம்பெறவுள்ளது. (ம-159)



## அமெரிக்க தூதரக அதிகாரி

# பி.சி.ஆர். பரிசோதனையை நிராகரித்து நாட்டுக்குள் நுழைவு

கொழும்பு, ஜூன் 5
கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தின் இராஜதந்திர அதிகாரி ஒருவர் நேற்று வியாழக்கிழமை அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் பி.சி.ஆர் பரிசோதனையை நிராகரித்து நாட்டுக்குள் பிரவேசித்துள்ளார்.

இராஜதந்திர சிறப்புரிமையின் கீழ் பரிசோதனையை மேற்கொள்ளாது அவர் அங்கிருந்து வெளியேற அனுமதிக்கப்பட்டதாக விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் உபதலைவர் ரஜிவ் சூரியஆராச்சி தெரிவித்தார்.
கட்டார் விமான சேவைக்கு சொந்தமான விமானத்தில் தூதரக அதிகாரி இன்று அதிகாலை 1.30 அளவில் விமான நிலையத்தை வந்தடைந்தார். இதேவேளை, தமது இராஜதந்திர பணியாளர்கள் இலங்கைக்கு வருகைதரும் போது, இராஜதந்திர உறவுகள் தொடர்பிலான சர்வதேச இணக்கப்பாடுகள், தரங்கள் மற்றும் வழிமுறைகள் பின்பற்றப்படுவதாக கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் தெரிவித்தது. (ஒ.5)

## பி.சி.ஆர்பரிசோதனை விவகாரத்தால்

# அமெரிக்காவுடன் இலங்கை முறுகல்

கொழும்பு, ஜூன் 5
கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தின் இராஜதந்திர அதிகாரி ஒருவர் நேற்று வியாழக்கிழமை அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோதனையை நிராகரித்து நாட்டுக்குள் பிரவேசித்துள்ளார்.
யாராக இருந்தாலும் பி.சி.ஆர். பரிசோதனையைக் கட்டாயம் மேற்கொள்ளவேண்டும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.
இராஜதந்திர சிறப்புரிமையின் கீழ் பரிசோதனையை மேற்கொள்ளாது அமெரிக்க இராஜதந்திரி அங்கிருந்து வெளியேற அனுமதிக்கப்பட்டதாக விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் உபதலைவர் ரஜிவ் சூரியஆராச்சி தெரிவித்தார். கட்டார் விமான சேவைக்கு சொந்தமான விமானத்தில் தூதரக அதிகாரி நேற்று அதிகாலை 1.30 அளவில் விமான நிலையத்தை வந்தடைந்தார்.
இதேவேளை, தமது இராஜதந்திர பணியாளர்கள் இலங்கைக்கு வருகைதரும் போது, இராஜதந்திர உறவுகள் தொடர்பிலான சர்வதேச இணக்கப்பாடுகள், தரங்கள் மற்றும் வழிமுறைகள் பின்பற்றப்படுவதாக கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் தெரிவித்தது.
"வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் எவராகினும் பி.சி.ஆர். பரிசோதனையை நிராகரிக்க முடியாது. சாதாரண பயணிகளைப் போன்றே இராஜதந்திர அதிகாரிகளும் பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொள்ள வேண்டியது கட்டாயமானது" என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஒ.5)

# கசிப்பை வைத்திருந்த பூசகர் நேற்றுக் கைது

வடமராட்சி, ஜூன் 5
வீட்டுக்குள் சட்டத்துக்குப் புறம்பாக கசிப்பை மறைத்து வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் பூசகர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர்.
ஏழாலையைச் சேர்ந்த பூசகர் ஒருவரே 27 லீற்றர் கசிப்பை வீட்டின் குளியலறையில் மறைத்து வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுப் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார்.
காங்கேசன்துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சேனாதீரவின் கீழான சிறப்புக் குற்றத்தடுப்புப் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது இந்தக் கைது நடவடிக்கை எடுக்கப்பட்டது. (ம-26)

# கொரோனா 1,797

கொழும்பு, ஜூன் 5
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 1.797ஆக அதிகரித்துள்ளது.
கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களில் 947 நோயாளிகள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 839 பேர் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர். அத்துடன் இதுவரை 11 பேர் உயிரிழந்துள்ளனர். (ம-22)

# ஆனந்தபுரத்தில் கஞ்சா செடிகள்

கிளிநொச்சி, ஜூன் 5
கிளிநொச்சி ஆனந்தபுரம் பகுதியில் சூட்சுமமான முறையில் வளர்ப்பட்ட சுமார் 4.5 அடி உயரம் கொண்ட 9 கஞ்சா செடிகள் கிளிநொச்சி பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளன.
கிளிநொச்சி நகரை அண்மித்த ஆனந்தபுரம் பகுதியில் மேற்படி கஞ்சா செடி வளர்க்கப்பட்டு வருகின்றமை தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் சிறு குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி பிரதீபனுக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து பொலிஸ் நிலையத்தின் சிறு குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி ஏஸ். பிரதீபன் தலைமையிலான பொலிஸ் உத்தியோகத்தர்கள் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின்போதே இந்த கஞ்சாச் செடிகள் மீட்கப்பட்டன. அவற்றை வளர்த்தவர் என்ற சந்தேகத்தில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வுபெறுவோருக்கு ஓய்வூதிய மாதாந்த முற்பணம் வழங்குக

## அரச பொது ஊழியர் சங்கம் கோரிக்கை

**அம்பாறை, ஜூன் 5**

**ஓய்வுபெறும் அரச சேவையாளர்களுக்கு அவர்களது கோவைகளில் காணப்படும் குறைபாடுகள் சீர் செய்யப்படும் வரை மாதாந்த ஓய்வூதியச் சம்பள முற்பணம் வழங்கப்பட வேண்டும் என்று அரச பொது ஊழியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.**

அந்தச் சங்கம் ஜனாதிபதி, பிரதமர், பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர், ஓய்வூதிய திணைக்களத் தலைவர் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ள மனு ஒன்றில் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியுள்ளது. அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் சார்பில் அதன் தலைவரும் தொழிற்சங்கவாதியுமான எஸ்.லோகநாதன் இந்த மனுவை அனுப்பியுள்ளார்.

அந்த மனுவில் உள்ளதாவது

நாட்டில் அரச சேவையில் கடமைபுரிந்து ஓய்வுபெறும் அரச சேவையாளர்கள் மாதாந்த ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்வதற்கு பல தடைகளைத் தாண்ட வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்படுவதையும் இதன் காரணமாகப் பல்வேறு பொருளாதாரக் கஷ்டங்களுக்கு ஓய்வுபெறும் அரச ஊழியர்கள் முகங்கொடுக்க வேண்டிய சூழ்நிலை உள்ளதையும் நாம் அறிவோம்.

அரசாங்கங்கள் மாறி மாறிவந்து இவ்விடயத்தில் பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்தாலும் அவை ஏட்டுச்சுரக்காய் போன்ற நிலைமையில் இருப்பதையும் அரச சேவையாளர்கள் மாதாந்த ஓய்வூதியத்தை ஓய்வுபெற்று அடுத்த மாதம் பெறமுடியாத நிலைமையிலேயே உள்ளமையையும் சுட்டிக்காட்டுகின்றோம்.

ஓய்வுபெறுவதற்கு சுமார் ஏழு மாதங்களுக்கு முன்னர் ஓய்வூதிய விண்ணப்பத்தை சேவை புரியும் அலுவலகத்தில் ஊழியர்கள் சமர்ப்பித்தாலும் அந்த விண்ணப்பங்கள் அமைச்சு, திணைக்களம் ஊடாக சென்றுவரும்போது கோவையில் காணப்படுகின்ற குறைபாடுகள் காரணமாக மீண்டும் அனுப்பப்பட்ட அலுவலகத்துக்குத் திருப்பி அனுப்பப்படுவதுடன் தேக்க நிலையும் ஏற்படுகின்றது.

சம்பளச் சுற்றறிக்கையைச் சரியாகக் கவனத்திற்கொள்ளாது பதவி உயர்வின்போதான சம்பளமாற்றம் செய்தல், கழிப்பீடு, புதிய சம்பளத்திட்டத்தின்பிரகாரம் சம்பளம் செய்யும்போது ஏற்படும் வழுக்கள், ஆவணங்களில் காணப்படும் குறைபாடு போன்ற பல காரணங்கள் உள்ளன. அரச சேவையாளர்கள் ஓய்வுபெறும்போது சகல குறைபாடுகளும் அவரின்மீது சுமத்தப்பட்டு இழுத்தடிக்கப்படும் நிலைமைதான் கூடுதலாக உள்ளது. இத்தகைய நிலைமையால் கூடுதலாக அரச சேவையாளர்கள் பாதிப்புக்குள்ளாகிவருகின்றனர்.

எனவே ஓய்வுபெறும் அரச ஊழியர்களின் கோவைகளில் காணப்படும் குறைபாடுகள் சீர் செய்யப்படும்வரை அரச சேவையாளர்கள் ஓய்வுபெற்றுக்கொள்வதில் தடங்கல்கள் ஏற்படுவதால் இந்தக் குறைபாடுகள் சரிசெய்யப்படும் வரை குறித்த அரச சேவையாளர்களுக்கு ஓய்வூதியச் சம்பள முற்பணத்தை அவர்கள் சேவையாற்றிய அலுவலகம் மூலமாக மாதாந்தம் வழங்கப்படுவதற்கு ஆவனசெய்யப்பட வேண்டும்.

இதற்கான அனுமதியை பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சும் ஓய்வூதிய திணைக்களமும் வழங்குவதுடன் இதைச் சுற்றறிக்கை மூலமாக வெளியிடுவதற்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

அரச சேவையில் 30 வருடங்கள் சேவையாற்றிய அரச சேவையாளர்களுக்கு 79 வீதம் ஓய்வூதியம் பெற்றுக் கொள்வதற்கு உரித்துண்டு. இது சுற்றறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கோவையிலுள்ள குறைபாடுகள் சரிசெய்யப்படும் வரை இத்தொகையில் 76 வீதத்தை முற்பணமாக மாதாந்தம் வழங்குவதுடன் இதேபோன்று சேவைக்காலம் குறைவானவர்களுக்கும் அவர்களது மொத்த சேவைக் காலத்திலிருந்து கணித்து வழங்கப்படல் வேண்டும்.

அரசாங்கம் இந்த விடயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கவேண்டுமென நாம் கோருவதுடன் இதன்மூலம் அரச சேவையாளர்களில் தங்கி வாழ்பவர்கள் மற்றும் அவர்களது பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு உதவுவதாக அமையும்.

60 வயதின் பின்னர் ஓய்வுபெறும் அரச சேவையாளரின் நிலைமை ஓய்வூதிய காலப்பகுதியில் அலுவலகத்துக்கு தொடர்ச்சியாக ஏறி இறங்கி அலைகின்ற அவல நிலைமைகளை தவிர்ப்பதுக்கும் உதவும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். என்றுள்ளது. (எ-30)

## சொரூபம் உடைப்பு வெளிநாட்டவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 5

யாழ்ப்பாணம் மூன்றாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள அடைக்கல மாதா தேவாலயத்தின் திருச்சொரூபத்தின் கை மற்றும் கண்ணாடிக் கூடையை உடைத்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவர் வெளிநாட்டவர் என்றும் மனநலம் குன்றியவர் என்றும் தெரிவிக்கப்பட்டு தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றுயாழ்ப்பாணப்பொலிஸார் தெரிவித்தனர்.

தற்போது மாதாவின் சொரூபம் பாதுகாப்பு நலன் கருதி அடைக்கல மாதா ஆலயத்தின் உட்பகுதிக்குள் வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## போதைப்பொருள் கடத்தலை கட்டுப்படுத்தத் திட்டம்

கொழும்பு,ஜூன் 5

பாதாள உலகக் குழுக்கள் மற்றும் போதைப் பொருள் கடத்தல்களை கட்டுப்படுத்தும் வகையில் புதிய திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது என்று மேல்மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

குறித்த நடவடிக்கைகளுக்காக குற்றப்புலனாய்வுப் பிரிவினரின் உதவி பெற்றுக்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## அனுமதியின்றி மணல் ஏற்றிய வாகனத்துடன் சாரதி கைது

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முகமாலையில்அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய டிப்பருடன், சாரதி நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். சாரதி மேலதிக விசாரணையின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சாரதியை கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பளை பொலிஸார் தெரிவித்தனர். (க-6)

## தொலைபேசி விற்பனை நிலையத்தில் திருட்டு

யாழ்ப்பாணம்,ஜூன் 5

பருத்தித்துறை கடைவீதியில் உள்ள தொலைபேசி விற்பனை நிலையத்தில் சுமார் ஒரு லட்சம் பெறுமதியான மூன்று தொலைபேசிகள் திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-159)

## இணையக் குற்றங்கள் சடுதியாக அதிகரிப்பு!

கொழும்பு, ஜூன் 5

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு காலப்பகுதியில் நாடு முழுவதும் 3 ஆயிரத்து 900க்கும் மேற்பட்ட இணையக் குற்றங்கள் பதிவாயிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை கணினி அவசர நடவடிக்கை பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது. இதன்படி இறுதி ஒன்பது வாரங்களில் 3 ஆயிரத்து 900 முறைப்பாடுகள் கிடைத்துள்ளனஎன்றும்அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு இலங்கை கணினி அவசர நடவடிக்கை பிரிவின் தகவல் பாதுகாப்பு பொறியாளர் ரவிந்து மீகாஸ்முல்ல தெரிவித்துள்ளதாவது

நாட்டில் கொரோனாத் தொற்று வேகமாகப் பரவிவரும் நிலையில், பிஷிங், தனியுரிமை மீறல்கள், மோசடிகள், சமூக ஊடக தொடர்பான சம்பவங்கள் மற்றும் ஹேக்கிங் தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையைக் குற்றவாளிகள் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டுள்ளனர்.

இந்தஆண்டுஇறுதிக்குள்இணையக் குற்றங்கள் மிகப்பெரிய அளவில் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கிறோம். இந்த நேரத்தில் கூடுதல் விழிப்புடன் இருப்பது பொதுமக்களின் கடமையாகும் - என்றார். (எ-ரி)

## குளவி கொட்டியதில் 10 பெண்கள் காயம்



தோட்டத் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களை குளவிகள் கொட்டியதில் 10 பேர் காயமடைந்த நிலையில் கொட்டகலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொட்டகலை பொரஸ்கிறிக் தோட்டத்தில் தேயிலைக் கொழுந்து பறிக் கும் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களே, குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் 10 பேரும் பெண்கள் என தெரிவிக்கப்பட்டது. (ப)


## கொரோனாத் தொற்றுக்கு மலேரியா தடுப்பு மருந்து

### மீண்டும் பரிசோதனைக்கு

கொழும்பு,ஜூன் 5

மலேரியா தடுப்பு மருந்தான ஹைட்ரொக்ஸி க்ளோரொகுயினை கொரோனா வைரஸ் தடுப்புவைத்திய பரிசோதனைக்கு மீளப் பயன்படுத்துவதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் இணக்கம் தெரிவித்துள்ளது.

கடந்த 25 ஆம் திகதி குறித்த நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையில், உலக சுகாதார ஸ்தானபம் இந்த



அறிவித்தலை வெளியிட்டுள்ளது. பாதுகாப்புக் காரணங்களைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்கான முன்மொழிவு

யாழ்ப்பாணம்,ஜூன் 5

**வடக்கு மாகாணத்தில் பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்காக மத்திய கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் உயர் அதிகாரிகளுடன் வட மாகாண கல்விச் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் அலுவலர்களுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலுக்கு இணங்க பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்குரிய யோசனைகள் முன்வைக்கப்பட்டு அதற்கான தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.**

இது தொடர்பில் மாகாணக் கல்விப்பணிப்பாளரால் அனுப்பப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

அரசால் அறிவிக்கப்படும் திகதியில் இருந்து நான்கு கட்டங்களாக கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு யோசனைகள் முன்மொழியப்பட்டுள்ளன.

முதலாம் கட்டமாக அதிபர்கள், ஆசிரியர்கள் பாடசாலைக்கு வருகை தந்து பாடசாலைச் சமூகத்தினரின் பங்கேற்புடன் கைகழுவும் நிலையம், நீர் வசதிகளை ஏற்படுத்தல், டெங்குக் கட்டுப்பாடு தொடர்பாக துப்பரவு பணிகள் சிரமதானம் மேற்கொள்ளல், கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கான புதிய நேரசூசிகள் தயாரிப்பு, பாடங்களை நடத்துதல் தொடர்பாக ஆசிரியர்களுடன் ஒழுங்கமைப்புக்களை மேற்கொள்ளல், சமூக இடைவெளியைப் பேணக்கூடியவாறு ஒரு வகுப்பில் 20 மாணவர்கள் இருக்கத்தக்கவாறு ஏற்பாடு செய்தல், அதிக எண்ணிக்கையில் மாணவர்களைக் கொண்ட வகுப்புக்களைப் பிரித்து இரு வேளை பாடசாலைகளை நடத்துவது தொடர்பில் திட்டமிடலை மேற்கொள்ளல் என்பன முதலாம் கட்டமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

இரண்டாம் கட்டமாக தரம் 10, 11, 12, 13 வகுப்புக்களை ஆரம்பித்தலும், நாளொன்றுக்கு தரம் 10, 11 இற்கு மூன்று மணித்தியாலங்களும், தரம் 12, 13 க்கு 4.30 மணித்தியாலங்களும் பாடங்கள் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் கட்டமாக தரம் 5, 6, 7, 8, 9 வகுப்புக்களை ஆரம்பித்து தரம் 5 க்கு நாளொன்றுக்கு மூன்று மணித்தியாலங்களும், தரம் 6 தொடக்கம் 11 வரை 4 மணித்தியாலங்களும், தரம் 12, 13 க்கு 4.30 மணித்தியாலங்களும் பாடசாலைகளை நடத்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

நான்காம் கட்டமாக நிலைமைகளை அனுசரித்து பாடசாலையின் சகல நடவடிக்கைகளையும் வழமையான நிலைக்குக் கொண்டு வருதல்.

தற்போதைய நிலைமைகளுக்கு ஏற்றவாறாகவும் கல்வி அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கு அமையவும், மாணவர் வரவு, ஆசிரியர் வரவு மற்றும் வழமையான நேரசூசி அமுலாக்கம் என்பவற்றை நியம நிலைக்குக் கொண்டு வருவதுடன் பாடசாலையின் சகல செயற்பாடுகளையும் அதன் பிரகாரம் தொடர்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் பின்பற்றப்பட வேண்டிய சுகாதார நடைமுறைகள், கைகழுவும் செயற்பாடு, முகக்கவசம் அணிந்திருத்தல், தனிநபர் இடைவெளியைப் பேணுதல் என்பன தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படுவதுடன், பாடசாலையில் மாணவர்கள் அல்லது ஆசிரியர்களுக்கு சுகவீனம் ஏற்படும் ஓர் நிலையில் எவ்வாறு செயற்படவேண்டும் என்பது தொடர்பிலும், சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களாலும் பாடசாலை அதிபர்களுக்கு உரிய அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன், பாடசாலையைத் திறப்பது தொடர்பில் அரச அறிவித்தலை எதிர்பார்த்துள்ளோம்.

பாடசாலைகளில் கைகழுவும் நிலையங்கள், நீர் வழங்கல் வசதிகள், சுகவீன அறை ஏற்படுத்தல் என்பவற்றுக்காக மத்திய கல்வி அமைச்சினது 9.9 மில்லியன் ரூபா நிதி கல்வி அமைச்சின் பிரமாணங்களுக்கு அமைய பாடசாலைகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக வெப்பநிலை அளவிடும் கருவி, சுகவீன ஒய்வு அறைக்கான தளபாடங்கள் என்பன நேரடியாக மத்திய கல்வி அமைச்சினால் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவை தொடர்பில் கிடைக்கப்பெறும் உரிய நிதிகள் பாடசாலைகளுக்கு விடுவிக்கப்படும்.

இதன்பொருட்டு பாடசாலைகளில் கைகழுவும் நிலையம் மற்றும் நீர் வழங்கல் வசதிகளை ஏற்படுத்தும் ஒத்துழைப்புக்காக வட மாகாணத்தின் 35 கல்விக் கோட்டங்களிலும் தலா ஒவ்வொரு பாடசாலை வீதம் Sri Lanka Red Cross Society அமைப்பும் கிளிநொச்சி, துணுக்காய் ஆகிய கல்வி வலயங்களின் மொத்தம் 75 பாடசாலைகளுக்கு Save the Children in Sri Lanka அமைப்பும் மற்றும் கிளிநொச்சியின் 12 பாடசாலைகளுக்கு கொய்கா(KOICA) செயற்திட்டத்தின் கீழ் OFERR நிறுவனமும் முன்வந்துள்ளன.

கொவிட் 19 பரவல் நிலைமைகளை எதிர்கொள்வதற்கு மேற்குறிப்பிட்ட வசதிகள் பாடசாலைகளில் போதுமானவை அல்ல என்பதுடன், இவற்றை ஏற்படுத்துவதற்கு வழங்கப்படும் விசேட உதவிகளும் போதுமானவை அல்ல. எனவே இது தொடர்பில் பாடசாலையில் சுகாதார பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள், சமய நிறுவனங்கள் முதலான சகல சமூக நிறுவனங்களும் தமது பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வரவேண்டும். என்றுள்ளது. (க)

## 25 மதுபான போத்தல்களுடன் சிக்கிய நபர்

யாழ்ப்பாணம்,ஜூன் 5

25 மதுபான போத்தல்களுடன் (காற் போத்தல்) கைது செய்யப்பட்ட நபருக்கு நீதிமன்றால் 30 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

வேலணை 4 ஆம் வட்டாரம் வீடொன்றில் சட்ட விரோதமான முறையில் மதுபானம் விற்பனை செய்யப்படுகிறது என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. எஸ்.ஐ.விவேகானந்தன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த நபரைக் கைது செய்தனர். அவர் வசம் இருந்த 25 மதுபான போத்தல்களைக் கைப்பற்றினர்.

குறித்த நபர் ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதி யூட்சன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார். அவருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (க)

### குடமுருட்டிப் பாலத்தின் இரும்புகள் திருட்டு

## பிரதான சந்தேகநபர் உள்ளிட்ட மூவர் கைது


கிளிநொச்சி, ஜூன் 5

கிளிநொச்சி பரந்தன் பூநகரி வீதியில் 14ஆவது கிலோ மீற்றரில் அமைந்துள்ள குடமுருட்டிப் பாலத்தின் இரும்புகள் கடந்த மாதம் திருடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பிரதான சந்தேகநபர் உள்ளிட்ட மூவர் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வந்த கிளிநொச்சி பொலிஸார், கிளிநொச்சி கனகபுரம் வீதியில் கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்துக்கு முன்பாக உள்ள இரும்புத் தொழிலகம் ஒன்றில் பாலத்தின் பாகங்கள் அறுக்கப்பட்ட நிலையில் இருப்பதைக் கண்டுபிடித்தனர். அத்தோடு பாலத்தின் மற்றொரு தொகுதிப் பாகங்கள் கிளிநொச்சி ஏ-9 வீதியில் 155 ஆம் கட்டைப் பகுதியிலும் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன. இப் பாகங்களின் பெறுமதி 10 தொடக்கம் 15 மில்லியன் வரை இருக்கும் என வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையிலேயே இரும்புக் கடை ஒன்றின் முதலாளி உட்பட மூவர் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது பொதுச் சொத்துக்களைத் திருடியவர் என்ற குற்றத்தின் பெயரில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கிளிநொச்சி சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிசாந்த சந்திரசேகர தெரிவித்தார். (ப-214)

## வெட்டுக்கிளிகளை அவதானித்தால் 1920 என்ற இலக்கத்துக்கு அழைக்கவும்



யாழ்ப்பாணம்,ஜூன் 5

நாட்டின் பல பிரதேசங்களிலும் அடையாளம் காணப்பட்டுவரும், பயிர்களை நாசமாக்கும் கறுப்பு மற்றும் மஞ்சள் நிற வெட்டுக்கிளிகளை அவதானித்தால் 1920 என்ற இலக்கத்துக்கு அறிவிக்குமாறு விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த இலக்கத்துக்கு அழைப்புக் கிடைத்தவுடன், அப்பிரதேசங்களுக்கு விவசாயத் திணைக்களத்தின் அதிகாரிகளை அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இந்த வெட்டுக்கிளி கோபி வெட்டுக்கிளி என அறியப்படும் அதேவேளை, இதன் விஞ்ஞானப் பெயர் அவுலாவெஸ் மிலியாரிஸ் என்பதாகும்.


இதேவேளை, குருநாகல் மாவத்தகமவில் பிரதேசத்திலேயே அண்மையில் இந்த வெட்டுக்கிளிக் கூட்டம் அடையாளம் காணப்பட்டதையடுத்து விவசாயத் திணைக்கள அதிகாரிகள் குழுவொன்று அப்பகுதிக்கு விரைந்து ஆய்வுகளை மேற்கொண்டிருந்தது.

அப்பிரதேசத்தில் இவ்வெட்டுக்கிளிகள் பயிர்களுக்கு [illegible] ஏற்படுத்தியிருந்ததை [illegible] தாக இருந்தது. (ஐ)

## திங்கள் முதல் ரயில் சேவைகள் வழமைக்கு

எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் ரயில் சேவைகள் வழமைக்குத் திரும்பும் என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

அதேவேளை கொழும்பு -பதுளை இடையேயான தேனுவாரா மெனிக்கே, கொழும்புகாங்கேசன்துறை ரயில் என்பன அன்று சேவையில் ஈடுபடாது என்று திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையுடன் இணைந்து உலகை கட்டியமைப்போம்

## முன்னாள் விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஜூன் 5**

**கொரோனா வைரஸ் இயற்கையிலிருந்து வேறான தொன்றல்ல. அதுவும் இயற்கையில் ஓர் படைப்பே. அதன்மூலம் இன்று இயற்கை ஊதியிருக்கும் அபாயச்சங்கு மனுக்குலத்துக்கான ஓர் எச்சரிக்கை. இதனைப் புரிந்து கொண்டவர்களாகக் கொரோனாவுக்குப் பின்னரான புதியதோர் உலகை இயற்கையுடன் இசைந்து கட்டமைப்போமாயின் ஏனைய உயிர்களைப் போன்று இப்புவியில் மனிதன் நோய் நொடியின்றி நீடூழிவாழலாம் என்று தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவரும் வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சருமான பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.**

உலக சுற்றுச்சூழல் தினம் ஜூன் 5ஆம் திகதியான இன்று ஐக்கிய நாடுகள் சபையால் கொண்டாடப்பட்டு வருகிறது. இதை முன்னிட்டு பொ.ஐங்கரநேசன் வெளியிட்டிருக்கும் ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மனித உயிர்களைக் கொத்துக் கொத்தாகப் பலியெடுத்துக் கொண்டிருக்கும் புதிய கொரோனா வைரஸ் இதன் மூத்த முடிசூடிகளான சார்ஸ், மேர்ஸ் வைரசுக்களைப் போன்றே காட்டு விலங்குகளில் இருந்து மனிதர்களுக்குத் தாவிய விலங்கு வைரஸ் ஆகும். புதிய கொரோனா வைரஸின் கருப்பொருளை ஆராய்ந்ததில் இவற்றின் உறைவிடம் சீனாவின் குதிரைலாட வௌவால்களும் சீனச்சந்தைகளில் விற்பனையாகும் மலாயன் அழுங்குகளும் என்பது தெரியவந்துள்ளது. இவற்றை உறைவிடமாக அல்லது இடைவிருந்து வழங்கிகளாகக் கொண்டிருந்த சார்ஸ் வகைக் கொரோனாக்களே மனிதர்களில் தாவிப் பெருகும்போது விகாரமுற்று கொரோனா 19 என்ற இரண்டாவது அவதாரமெடுத்து உலகை வலம்வரத் தொடங்கியுள்ளது.

காட்டுவிலங்குகள் மனிதனுக்கு இதுவரையில் அறிமுகம் இல்லாத எண்ணற்ற வைரஸ்க்களின் உறைவிடங்களாக உள்ளன. மனிதர்கள் இவற்றைக் கையாளுகின்ற போது, மனிதர்களுக்குத் தாவிவிடுகின்ற இவை, அதுவரை பரிச்சயமில்லாத வைரஸ் என்பதால் நோய் எதிர்ப்புசக்தியைக் கொண்டிராத நிலையில் அங்கு பல்கிப்பெருகத் தொடங்குகின்றன. பின்னர், அங்கிருந்து காட்டுத்தீ போல எளிதில் மனிதர்களுக்கு மனிதர் பரவ ஆரம்பித்துவிடுகின்றன.

சார்ஸ், மேர்ஸ் நோய்கள் காட்டுவிலங்குகளில் உறையும் வைரஸ்க்களினால் எதிர்காலத்தில் ஏற்படவுள்ள அபாய அறிவிப்புகளாக இருந்தபோதும் மனிதர்கள் அதனைக் கண்டுகொள்ளவில்லை. உணவுக்காகவும், மருத்துவத்துக்காகவும், செல்லப் பிராணிகளாக வளர்ப்பதற்கெனவும் தினமும் காடுகளில் இருந்து விலங்குகள் கடத்தப்படுவது தொடர் கதையாகவே நீடிக்கிறது. போதைப்பொருள் கடத்தல், ஆயுதக் கடத்தல் போன்று வன விலங்குகள் கடத்தலும் சர்வதேச வலைப்பின்னலோடு பெருமெடுப்பில் இடம்பெற்றுவருகிறது.


காட்டு விலங்குகளின் கடத்தலினால் உலகின் உயிர்ப் பல்வகைமை கேள்விக்குறியாகி வருகிறது. கடந்த 2019 ஆம் ஆண்டில் மட்டும் இரண்டு இலட்சம் அழுங்குகள் அவற்றின் செதில்களைப் பெறும் பொருட்டுக் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டிருப்பதாக உலக கானுயிர் நிதியம் தெரிவித்திருக்கிறது. உலகில் எல்லா உயிரினங்களும் ஒன்றுடன் ஒன்று ஏதோ ஒரு விதத்தில் தொடர்புபட்டு உயிர்வலைப்பின்னலாகவே இயங்குகின்றன. இவற்றில் ஓரிழை அறுந்தாலும் உயிரினச் சமநிலை பாதிக்கப்பட்டுக் கடைசியில் மனிதர்களும் பாதிப்புக்குள்ளாக நேரிடும்.

காட்டுவிலங்குகளில் மாத்திரம் அல்ல, இதுவரை மனிதர்களுக்குப் பரிச்சயம் இல்லாத, மனிதர்கள் பூமியில் நடமாடுவதற்கு முன்பாகவே தோன்றிய ஏராளமான வைரஸ்க்கள் துருவப் பனிப்பாறைகளின் கீழ் உறங்குநிலையில் இருப்பதாக ஆய்வாளர்கள் அண்மையில் கண்டறிந்துள்ளனர். மனிதர்கள் அளவுக்கு அதிகமாக வெளியேற்றுகின்ற கரிக்காற்று பூமியைச் சூடுபடுத்துவதால் பனிப்பாறைகள் உருகி வழிய ஆரம்பித்திருக்கின்றன. இதன்போது பனிப்பாறைகளில் சிக்குண்டு இருக்கும் வைரஸ்க்களும் வெளியேற நேர்ந்தால் எதிர்காலத்தில் இவற்றுக்கும் சேர்த்தே மனிதர்கள்; முகம் கொடுக்க நேரிடும்.

கொரோனா வைரஸ் இயற்கையில் இருந்து வேறானதொன்றல்ல. அதுவும் இயற்கையில் ஓர் படைப்பே. அதன் மூலம் இன்று இயற்கை ஊதியிருக்கும் அபாயச் சங்கு மனுக்குலத்துக்கான ஒரு எச்சரிக்கை. இதனைப் புரிந்து கொண்டவர்களாகக் கொரோனாவுக்குப் பின்னரான உலகை இயற்கையுடன் இசைந்து கட்டமைப்போமாயின் ஏனைய உயிர்களைப் போன்று இப்புவியில் மனிதன் நோய் நொடியின்றி நீடூழிவாழலாம். இல்லை, இது செவிடன் காதில் ஊதிய சங்காகத்தான் இருக்குமெனின் இயற்கை இன்னும் இன்னும் வலிய கொரோனாக்கள் மூலம் எங்களுக்கான எச்சரிக்கையை விடுத்துக்கொண்டேயிருப்பது தவிர்க்க முடியாததாகவே இருக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ.5)

# மத்தளவிலிருந்து விமான சேவைகள்

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதல் சில விமான சேவைகளை மத்தள மகிந்த ராஜபக்ஸ சர்வதேச விமான நிலையத்தில் இருந்து இயக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது என்று விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் ஷெஹான் சுமனசேகர தெரிவித்துள்ளார்.



எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தின் பின்னர் நான்கு விமான சேவை நிறுவனங்கள் மத்தள விமான நிலையத்துக்கு வருகை தரும்.

60 டொலர் விலைக்கழிவு நிவாரணத்தை பயணிகளுக்கு வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது.

விமான நிலையத்தில் தரையிறங்கல் மற்றும் தரிப்பிட கட்டணங்கள் என்பன நூறு வீதம் இரண்டு வருடங்களுக்கு தளர்த்தப்படவுள்ளன.

அதன் பிரதிபலனை விமான சேவை நிறுவனங்களுக்கும், பயணிகளுக்கும் வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சு)

*அரச...*

யின் உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவால் இரண்டு ஜனாதிபதி செயலணிகள் உருவாக்கப்பட்டுள்ளன. முப்படைகளைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் இவற்றில் அங்கம் வகிக்கின்றனர். இதற்கான வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் எமது நாட்டு அரச சேவை, இந்தச் செயலணிகளின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. செயலணியால் பிறப்பிக்கப்படும் உத்தரவுகளை நிறைவேற்ற வேண்டிய நிலை அரச அதிகாரிகளுக்கு ஏற்பட்டுள்ளது. இது அரசமைப்புக்கு முரணான செயலாகும். அதேபோல் முப்படைத் தளபதிகளைவிடவும் மூத்த நிலையிலேயே அமைச்சின் செயலாளர்கள் இருக்கின்றனர். எனினும், ஜனாதிபதியால் விடுக்கப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் இந்நிலைமை தலைகீழாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. செயலணியால் விடுக்கப்படும் உத்தரவுகளை அரச அதிகாரிகள் நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் அது தொடர்பில் ஜனாதிபதிக்கு முறையிடும் அதிகாரமும் செயலணிக்கு வழங்கப்பட்டுள்ளது. இது பயங்கரமான நிலையாகும். நாட்டை இராணுவ ஆட்சியை நோக்கி அழைத்துசெல்லும் பயணத்தின் மற்றுமொரு அங்கமாகும்.

பாதுகாப்பான நாடு, ஒழுக்கமான மற்றும் சட்டத்தை மதிக்கும் சமூகத்தை உருவாக்குவதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணியில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியல் டி சில்வா, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுமங்கல டயஸ் மற்றும் பதில் பொலிஸ் மா அதிபர் சீ.டி. விக்ரமரத்ன, சுங்கப் பணிப்பாளர் நாயகம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் விஜித ரவிப்பிரிய, தேசிய புலனாய்வுத் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ், அரச புலனாய்வுத் தகவல்கள் சேவையின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே உட்பட 13 பேர் அங்கம் வகிக்கின்றனர். இவர்களால் பிறப்பிக்கப்படும் உத்தரவுகளை, கட்டளைகளை ஏற்பதற்குத் தயாரா என அரச சேவையாளர்களிடம் கேட்கின்றோம்.

சமூகவிரோத செயற்பாடுகள் தொடர்பில் தேடும் பொறுப்பும் இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆனால், சமூகவிரோதச் செயற்பாடுகள் என்றால் எவை என்பது பற்றி வரைவிலக்கணம் வழங்கப்படவில்லை. ஊடகவியலாளர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், ஆன்மீக தலைவர்கள், கருத்து சுதந்திரத்துக்காக பாடுபடுபவர்களை ஒடுக்குவதற்காகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கலாம்.

பொதுத்தேர்தல் தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் தீர்ப்பு வெளியான நாளிலேயே இந்த வர்த்தமானி அறிவித்தலையும் விடுத்து அரச சேவையை இராணுவத்தின்கீழ் அரசு கொண்டு வந்துள்ளது. இது அரசமைப்பைத் தலைகீழாக மாற்றிய செயலாகும். இதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது பற்றி ஆராயப்பட்டுவருகின்றது - என்றார். (ஓ.5.44)

*ஹெரோய்...*

களிடமிருந்து 2 கிராம் 450 மில்லிக்கிராம் எடையுள்ள ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் ஐவரும் 20 தொடக்கம் 30 வயதுக்குட்பட்டவர்கள் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். சந்தேக நபர்கள் ஐவரும் விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாறுவேடத்தில் சென்ற பொலிஸாரிடம் சிக்கிய கஞ்சா வியாபாரி

## கல்முனையில் சம்பம்

அம்பாறை. ஜூன் 5

ஊரடங்கு அமுலில் இருந்தவேளையிலும், பதிவு செய்யப்படாத மோட்டார் சைக்கிளில் கஞ்சா மற்றும் வாள் என்பவற்றை கடத்தினார் என்று தெரிவித்து ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என கல்முனை பொலிஸார் தெரிவித்தனர். மாறு வேடத்தில் சென்ற பொலிஸ் குழுவினரே அவரைக் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதமுனை பகுதியில் அண்மைக்காலமாக மோட்டார் சைக்கிள் ஒன்றில் இளைஞர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு கஞ்சா விற்பனை செய்யப்படுவதாக மாவட்ட புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து கல்முனை தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.எச்.சுஜீத் பிரியந்தவின் வழிநடத்தலுக்கமைய பொலிஸார் கார் ஒன்றில் மாறுவேடம் அணிந்து சம்பவ இடத்துக்குச் சென்றனர்.

இதன் போது மாறுவேடத்தில் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைத்தொலைபேசி ஊடாக சந்தேக நபரைத் தொடர்பு கொண்டு கஞ்சாவை வாங்க முற்பட்டனர். சந்தேகநபர் கஞ்சா மற்றும் வாள் என்பற்றுடன் கறுப்பு நிற வாகன இலக்கத்தகடு அற்ற பதிவு செய்யப்படாத மோட்டார் சைக்கிளில் வருகை தந்துள்ளார்.

உடனடியாகச் செயற்பட்ட பொலிஸ் குழு சந்தேக நபரை மடக்கி பிடித்ததுடன் 300 கிராம் நிறையுடைய 75 கஞ்சா பக்கற்றுக்கள் குற்றச்செயலுக்கு பயன்படுத்தப்பட்டதாக நம்பப்படும் 2 அடி வாள், கைத்தொலைபேசி மற்றும் டியோ ரக கறுப்பு நிற மோட்டார் சைக்கிள் என்பற்றை மீட்டனர். கைதான சந்தேகநபர் மருதமுனை அல்மனார் வீதியை சேர்ந்த 27 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப)

# தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பிக்க காலம் நீடிப்பு

கொழும்பு,ஜூன் 5

தேர்தலுக்கான தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பிக்கும் காலம் எதிர்வரும் ஜூன் 08 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. எனவே சுகாதார சேவை ஊழியர்கள் அனைவரும் தபால் வாக்களிப்புக்கு விண்ணப்பிக்கலாம் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, வாக்களிப்பு நிலையங்கள் சிலவற்றை வலயமாக இணைத்து, அதற்கென ஒரு மருத்துவர் மற்றும் தாதியர் இருவரை கடமையில் ஈடுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக, சுகாதாரத்துறையினர் தேர்தலில் சேவையில் ஈடுபடுத்தப்படவிருப்பதால், அவர்களுக்கும் தபால் மூலம் வாக்களிப்பதற்கு வாய்ப்பளிக்கும் முகமாகவே இந்தக் கால நீடிப்பு வழங்கப்படுகிறது. விண்ணப்பங்களை பிரதேச தேர்தல் அலுவலகங்களில் ஒப்படைப்பதற்கு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் சூழ்நிலையில் தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அவசியமான சுகாதாரப் பரிந்துரைகள் உள்ளடங்கியவழிகாட்டல்கள் சுகாதார அமைச்சினால் தேர்தல் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டது.

தபால் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டிய விதம், அதில் பங்கேற்க வேண்டிய அரச ஊழியர்களின் எண்ணிக்கை, தேர்தல் தினத்திலான செயற்பாடுகள், வாக்குகளை எண்ணுவது தொடர்பாக சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்கள் உள்ளிட்டவை அதில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அத்துடன், தேர்தல் கூட்டங்கள் நடத்தும் விதம், வீடுவீடாகச் சென்று பிரச்சாரம் செய்வது தொடர்பான வழிகாட்டல்களும் அதில் வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் அனைத்து அரசியல் கட்சிகள், உதவித் தேர்தல் ஆணையாளர்கள் மற்றும் தேர்தல் கடமையில் ஈடுபடும் அரசாங்க அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கப்படும்.

எதிர்வரும் திங்களன்று கூடவுள்ள தேர்தல் ஆணைக்குழுவின் கூட்டத்தில்தேர்தல்திகதி தீர்மானிக்கப்படும்.

அதற்கமைய, அனைத்து மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு அலுவலகங்களின் பணிகளும் திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் காலத்தில், அரச சொத்துகளை தவறாகப் பயன்படுத்துவது உள்ளிட்ட நடவடிக்கைகளிலிருந்து முற்றாக தவிர்த்துக் கொள்ளவும் - என்றார். (க)

## பனாகொட இராணுவ மருத்துவமனை தயார் நிலையில்

தனிமைப்படுத்தல் நிலையங்களை கண்காணிக்கும் நடவடிக்கையில் இராணுவத்தினரே அதிகளவில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதால் அவர்கள் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாவதற்கான ஆபத்து அதிகமாக உள்ளது இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சந்தன விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தல் நிலையங்களில் கண்காணிப்பு பணியில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்ட போதிலும், அவர்கள் மத்தியில் வைரஸ் பரவலை தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (எ-ரி2)

## முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசேப்பு தமிழ் பேசும் மக்களின் அடையாளம்

### வண பிதா எஸ்.சந்திரகுமார் புகழாரம்



மன்னார், ஜூன் 5

கிறஸ்தவ மக்களுக்கு மாத்திரம் அல்ல தமிழ் பேசும் மக்களுக்கு ஓர் அடையாளமாகவும், ஒரு வீரத்தலைவனாகவும் முன்னாள் ஆயர்அதிமேதகு இராயப்பு ஜோசேப்பு ஆண்டகையை நான் பார்க்கின்றேன் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மத விவகாரங்களுக்கான இணைப்புச் செயலாளர் வண பிதா எஸ்.சந்திரகுமார் தெரிவித்தார்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இல்லத்துக்கு நேற்று வியாழக்கிழமை காலை வருகை தந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மத விவகாரங்களுக்கான இணைப்புச் செயலாளர் வண பிதா எஸ்.சந்திரகுமார் மன்னார் மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர் அதிமேதகு இராயப்பு ஜோசேப்பு ஆண்டகையைச் சந்தித்து ஆசி பெற்றார். அதனைத் தொடர்ந்து மன்னார் மறைமாவட்டத்தின் தற்போதைய நிலை தொடர்பாகக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

கிறஸ்தவ மக்களுக்கு மாத்திரம் அல்ல தமிழ் பேசுகின்ற மக்களுக்கு ஓர்அடையாளமாகவும், ஒரு வீரத்தலைவனாகவும் நான் அவரைப் பார்க்கின்றேன். இலங்கையில் இடம் பெற்ற அனைத்து பிரச்சினைகளுக்கும் ஒரு வீரத்தலைவனாக இருந்து குரல் கொடுத்து வந்துள்ளார். அவரின் கருத்துக்களுக்கு நான் மதிப்பளிக்கின்றேன். வட மாகாணம் பலவிதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளது. எத்தனை பிரச்சினை வந்தாலும் யாராக இருந்தாலும் ஆயர் இல்லத்துக்கு வந்து விடை பெற்றுச் செல்லுகின்றனர். ஆயர் இல்லத்தை நீதி வழங்கக்கூடிய சரியான ஓர் இடமாக நான் கருதுகின்றேன்-என்றார். (டி-56)

# கொரோனாவைக் கட்டுப்படுத்தியது புத்தரின் போதனையே!

## பிரதமர் மகிந்த கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜூன் 5

நாமனைவரும் நாடு என்ற வகையில் ஒன்றிணைந்து செயற்பட்டமையினாலும், புத்தமதத்தின் போதனையின் அடிப்படையில் உயரிய பண்புகள், சடங்குகளினைப் பின்பற்றியமையினாலும் இலங்கை கொரோனாத் தொற்று நோயை வெற்றிகொள்ளும் பாதையில் பயணிக்க முடிந்துள்ளது. என்று பிரதமர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

பிரதமரின் ஊடகப்பிரிவால் அனுப்பிவைக்கப்பட்ட பொசொன் போயா தினச் செய்தியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார் அதில் மேலும் உள்ளதாவது:

இம்முறை பொசொனின் பிறப்புடன் உலக சுற்றாடல் தினமும் அதே தினத்தில் கொண்டாடப்படுகிறது. எமது மூதாதையரின் முழு உடம்பிலும் ஒன்றித்துப் போயிருந்த இந்த சிரேஷ்ட தத்துவம் காரணமாக உயிரினங்கள் உட்பட இயற்கையின் அனைத்து அம்சங்கள் மீதும் நிதமும் அன்பு செலுத்தி, அவற்றைப் பாதுகாக்கின்ற பலமான தேசமொன்று தோற்றம் பெற்றது. இன்று அதற்கு மாற்றமாக நடந்து கொண்டதால் முழு உலகும் மீண்டும் தம்மை சுயவிசாரணை செய்துகொள்ள வேண்டும் என்பதே கோவிட் 19 தொற்று எடுத்துக்கூறும் முக்கிய பாடமாகும்.

நாமனைவரும் நாடு என்ற வகையில் ஒன்றிணைந்து செயற்பட்டமையினாலும், புத்தமதத்தின் போதனையின் அடிப்படையில் உயரிய பண்புகள், சடங்குகளினைப் பின்பற்றியமையினாலும் இலங்கை அத்தொற்றுநோயை வெற்றிகொள்ளும் பாதையில் பயணிக்க முடிந்துள்ளது. இன்னும் சிறிய காலப்பகுதிக்கு சுகாதார மற்றும் பாதுகாப்புப் பிரிவினர் வழங்கும் அறிவுறுத்தல்களின் அடிப்படையில் நாமனைவரும் செயற்பட வேண்டியுள்ளது. அதன் மூலம் இத்தொற்றினை முழுமையாகத் தோற்கடித்து, நாடு என்ற வகையிலும், நாட்டு மக்கள் என்ற வகையிலும் முன்னோக்கிப் பயணிக்க முடியும் என நம்புகிறேன். எனவே உயரிய பண்புகளுடன், அனைவருக்கும் அன்பு, கருணை காட்டி இத்தொற்றினை வெற்றிகொள்ள [illegible] என்றுள்ளது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
newuthayan.com



# சூழல் மீது காதல் கொள்வோம்

அ.நி.அன்ரனி டினேஷ்,
(B.Sc.M.Sc.(pera)

இன்று (ஜூன்- 5) உலக சூழல் தினம் சர்வதேச ரீதியில் அனுஷ்டிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இவ்வருடத்துக்கான உலக சூழல் தினத்தின் தொனிப்பொருளாக 'இயற்கைக்கான நேரம்' (Time for nature) என்பது அறிவிக்கப்பட்டிருக்கின்றது. பண்டைய தமிழ் இலக்கியம் புறநானூறு கூறுவது போல மக்களின் வாழ்வும் தாழ்வும் ஐம்பூதமான இயற்கையை மையமாக வைத்தே அமைந்துள்ளமையால் மனிதனுக்கு மட்டுமல்ல ஏனைய உயிரிகளுக்கும் அவை வாழும் சூழலே அவற்றின் நிலவுகையை தீர்மானிக்கின்றன. அத்தகைய சூழலுக்கு மனித நடவடிக்கைகளால் ஏற்பட்டுவரும் விரும்பத்தகாத மாற்றங்களும் அதனால் ஏற்படுகின்ற பாதகமான விளைவுகளும் உலகின் அழிவுக்கு இட்டுச் செல்லும் என்பதை உணர்ந்துகொண்டு உலகம் விழித்துக்கொண்டதன் விளைவே ஐ.நாவின் சுற்றாடல் அமைப்பினால் 1972ஆம் ஆண்டில் சுவீடனில் ஸ்ரொக்ஹோம் நகரில் நடைபெற்ற சுற்றாடல் மாநாட்டின் ஜூன் 5 சர்வதேச சுற்றாடல் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது. இதன் நோக்கமாக சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை உலகளாவிய ரீதியில் உணரச்செய்து அரசியல் மட்டத்தில் உரிய நடவடிக்கை எடுக்கத் தூண்டுவதாகும்.

சூழல் என்பது உயிரினங்களையும் அவை வாழும் சூழலிலுள்ள உயிரற்ற பகுதிகளையும் அதாவது காற்று, நீர், நிலம், கனிப்பொருள்களையும் உள்ளடக்கிய இயற்கை அமைப்பாகும். சூழலைப் பற்றிப் பேசுகையில் சூழல் மாசடைதல் என்ற விடயத்தைப் பற்றிப் பேசுவதும் இன்றைய காலகட்டத்தில் தவிர்க்க முடியாததாகியுள்ளது. இன்று உலகை அச்சுறுத்தும் முக்கிய பத்து பிரச்சினைகளுள் சூழல் மாசடைதலும் ஒன்றாகியுள்ளது. சூழல் மாசடைதல் என்பது இரசாயனப் பொருள்கள், வெப்பம், ஒளி, ஒலி, கதிர்வீச்சு போன்றவற்றால் சூழலின் இயற்கைத் தன்மை குழப்பமடைதல் ஆகும்.

அதாவது சூழலின் கூறுகளான உயிருள்ளவைகள், காற்று, நீர், மண் போன்றவற்றில் ஏற்படுத்தப்படும் விரும்பத்தகாத விளைவுககளால் உண்டாகும் பாதகமான மாற்றங்களே சூழல் மாசடவெனச் சொல்லப்படுகிறது.

காற்று மாசடைதலைக் கருதும் போது இன்று ஒலகின் 93 சதவீதமான மக்கள் காற்று மாசுபட்டுள்ள சுற்றுப் புறங்களில் வசிக்கின்றனர். உலகில் ஆண்டுக்கு 70 லட்சம் பேர் காற்று மாசாக்கத்தின் பாதிப்பினால் இறக்கின்றனர். மாசடைந்த காற்றில் சல்பர்டை ஒக்சைட், காபன் மொனொக்சைட், நைதரசன் நைஒக்சைட், காரியம் போன்ற நச்சு வாயுக்களும் பொருள்களும் கலந்திருக்கின்றன. இதன் விளைவாக இருதயக் குழாய் சேதம்,பக்கவாதப் பிரச்சினைகள், நுரையீரல் சார்ந்த நோய்கள் என்பன ஏற்படுகின்றன. காற்று மாசாக்கத்தைத் தூண்டும் காரணிகளாக சுவட்டு எரிபொருள்களின் தகனம், குப்பைக் குவியல்களிலிருந்து வெளிவரும் வாயுக்கள், அதிகரித்த பொலித்தின் மற்றும் பிளாஸ்ரிக் பாவனை, காடழிப்பு, போக்குவரத்து அதிகரிப்பு போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

நீர் மாசடைதல் என்பது தொழிற்சாலைகள், விவசாய நிலங்கள், பண்ணைகள், நகர்ப்புறக் குடியிருப்புக்கள் போன்றவற்றில் இருந்து வரும் கழிவுகள் நீர்நிலைகளில் கலப்பதனால் நீரின் தரமும் நீர் வாழ் உயிரினங்களும் பாதிக்கப்பட்டு அந்நீர் பயன்படுத்த முடியாத நிலையை அடைதல் ஆகும். உலகளாவிய ரீதியில் பாதுகாப்பான குடிநீர் இன்றி 8 செக்கனுக்கு ஒரு குழந்தை இறந்து கொண்டிருக்கின்றது.

அது மட்டுமல்ல நரம்பு சம்பந்தப்பட்ட நோய்கள் குழந்தைகளில் வளர்ச்சிக் குறைபாடு, பிறப்பு கோளாறுகள், புற்றுநோய், வயிற்றுப்போக்கு எண்ணெய் கசிவுகளால் தோல் எரிச்சல், அரிப்பு, மற்றும் மண் செழிப்பற்றுப்போக உணவு வலையில் பாதிப்பு என்பன ஏற்படுகின்றன. இவற்றுக்கான காரணிகளாக அதீத இரசாயன உரப் பயன்பாடு, தொழிற்சாலைகளில் சரியான நீர்ப் பரிகரிப்பு முறைகள் பின்பற்றப்படாமை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

மண் மாசடைதலும் நீர் மாசடைதலைப் போலவே முறையற்ற விவசாய நடவடிக்கைகள் மற்றும் அதித உரப்பாவனை பிளாஸ்ரிக்,பொலித்தீன் போன்ற பொருள்களை மண்ணினுள் புதைத்தல் அல்லது மண்ணுக்கு விடுவித்தல் போன்றவற்றால் ஏற்படுகின்றது. இதன் விளைவுகள் மனிதனுக்கு நோயாகவும் ஏனைய மண்ணில் வாழும் உயிரினங்கள் அழிந்து போவதற்கு காரணமாகவும் மண் தரிசாகி எதிர்காலத்தில் விவசாயம் பாதிக்கப்படுவதற்குக் காரணமாகவும் அமைகின்றன.

பொதுவாக சூழல் மாசடைதலை நோக்குமிடத்து மாசுபடுத்தும் விடயங்களாக காடழிப்பு, எரிபொருள் பாவனை, பிளாஸ்ரிக், பொலித்தின் என்பவற்றின் அதீத பாவனை, முறையற்ற விவசாய மற்றும் தொழிற்சாலை நடவடிக்கைகள் என காரணிகள் நீண்டு செல்கின்றன. எது எப்படியோ சூழல் மாசடைதலின் அனைத்து அம்சங்களிலும் மனிதர்களின் பங்கு பொதுவானதாக அறியப்படுகிறது.

எனவே சுற்றுச்சூழலின் நிலவுகையை தக்க வைப்பதற்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இன்றியமையாததாக அமைகின்றது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது தனிமனிதனோ/ அமைப்போ/ அரசாங்கமோ இயற்கைச் சூழல் பாழாகாமல் பாதுகாக்கும் செயலே. சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வழிமுறைகளாக சுற்றுச் சூழலுடன் தொடர்புடைய சட்டங்களை அமுல்படுத்தல்,சுற்றுச்சூழல் கல்வி முறைகளை அறிமுகம் செய்தல்,விழிப்புணர்வு நடவடிக்கைகளை, மரநடுகைளை அதிகரித்தல், எரிபொருள்பாவனைக்குறைப்பு, பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பாவனைக் குறைப்பு, குறைப் படுத்தப்பட்ட தொழிற்சாலை மற்றும் விவசாய நடவடிக்கைகளைக் குறிப்பிடலாம்.

இலங்கையில் சுற்றுச் சூழல் பாதுகாப்புடன் தொடர்புடைய நிறுவனங்களாக மத்திய சுற்றாடல் அதிகார சபை, மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு,மகாவலி அதிகாரசபை, வனப்பாதுகாப்பு திணைக்களம், கடல் மாசுறல் தடுப்பு அதிகாரசபை,அரச மரத்தளபாட கூட் டுத்தாபனம், கைத்தொழில் குறை தொழில்நுட்ப நிறுவனம் போன்றவை உள்ளன. இந்த நிறுவனங்களின் முக்கிய பணிகளாக இயற்கை வளப் பாதுகாப்பு, கழிவுப் பொருள்களை அகற்றுதல் மற்றும் முகாமைத்துவம்,தேசிய சுற்றாடல் கொள்கைகளை சர்வதேச சூழல் ஒப்பந்தங்களுடன் ஒருங்கிணைதல் இயற்கையைப் பாதுகாக்க இளம் பரம்பரைக்கு விழிப்புணர்வு ஊட்டல், தடுப்புச் சட்டம் இயற்றல் என்பன அமைகின்றன. இத்தனை பணிகளையும் செய்வதற்கு இவர்கள் இருக்கும் போது நமக்கு என்ன வேலை என்று பொறுப்பற்றவர்களாக இருந்து விட முடியாது. இதனால்தான் மாசுபடுத்துவதும் நாமே மருத்துவமனை வாசலில் நிற்பதும் நாமே என்ற நிலை உருவாகி இருக்கின்றது. இன்று சுனாமிப் புவி வெப்பமடைதல், ஒசோன் படையில் துவாரம் ஏற்படுதல், பருவமழை பொய்த்தல், அமிலமழை, பாலைவனமாதல்,உயிர்ப்பல்வகைமை அழிதல் போன்ற உலகளாவிய பிரச்சினைகளுக்கும் ஒவ்வொரு தனிமனிதனும் பொறுப்புச் சொல்ல வேண்டியவனாக உள்ளான். அண்மையில் அமேசன் காடு எரிந்து போனதற்கும் ஒரு தனி வர்த்தகரே காரணமாக இருந்துள்ளார் என்பது இதற்கு மிகப்பிந்திய உதாரணம்.

சூழலை வரைமுறையின்றி அழித்து நம் தலைமுறைகள் அதன் சாபத்தை அனுபவிக்க நாம் காரணமாயிருக்கக் கூடாது. இன்று கொரோனா நோய்த்தொற்று மனிதப் பேரழிவை அரங்கேற்றிக்கொண்டிருந்தாலும் சூழலைப் பொறுத்தவரை இயற்கை தன்னைப் புதுப்பிக்கும் காலமாக இந்த நோய்த்தொற்றுக்காலம் அமைந்திருக்கிறது. இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கை சுத்தமானதாக தேசிய கட்டட நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர் கூறியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. எனினும் நம் சூழலைப் பாதுகாக்க இவ்வாறானதொரு நோய்த்தொற்றுத் தான் வேண்டும் என்ற நிலை வேதனைக்குரியது.

நம் முன்னோர்களைப் போல சுற்றுச்சூழல் பாதுகாப்பை நம் முதன்மை கடமையாக கொள்ள வேண்டும். எம் மூதாதையர்கள் மூன்று கார் வைத்திருக்கவில்லை. நுகர்வுக் கலாசாரத்தின் அடிமைகளாக இருக்கவில்லை. இயந்திரங்களுக்குப் பதில் அவர்களின் கால்நடைகளும் கால்களுமே வேலை செய்தன. காரணம் அவர்களின் காதல் சூழல் மீது இருந்தது.

இப்பூமியில் அத்தனை உயிர்களும் நித்தமும் நிலையாக வாழ இத்தினம் உறுதி பூணுவோம். சொத்தாகப் பேணுவோம் நம் சூழல் தனை என்று எம் சித்தத்தில் பதித்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளை ஆரம்பிக்க 10ஆம் திகதிக்குள் தீர்மானம்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 5

**பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து ஜூன் 10 ஆம் திகதிக்குள் அரசு முடிவு செய்யும் என்று கல்வி அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.**

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியில் இது பற்றி தெரிவித்துள்ளார்.


கல்வி மற்றும் சுகாதார அமைச்சுக்கு இடையில் கலந்துரையாடல் இன்னும் இடம்பெற்றுவருகின்றது. இறுதி முடிவு எட்டப்படவில்லை. கல்வி அமைச்சின் குழு ஒன்று அண்மைய நாள்களில் அனைத்து மாகாணங்களுக்கும் சென்று பாடசாலைகளுக்கான சுகாதார வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது. அந்த வழிகாட்டுதல்களை பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டதும் அதிபர்கள் செயற்படுத்த வேண்டும். இது குறித்து அனைத்து தனியார் மற்றும் அரச பாடசாலைகளுக்கும் விளக்கமளித்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

இதேவேளை, மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லும்போது, அவர்களில் பலர் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துகிறார்கள், அவர்களால் பாடசாலை மற்றும் பொதுப் பேருந்துகளில் சமூக விலகலைக் கடைப்பிடிக்க முடியாது.

சுகாதார அதிகாரிகளின் கருத்துப்படி, கொரோனாத் தாக்கம் இருந்தால்கூட அதன் ஆணிவேரை கண்டுபிடிப்பது கடினமாக இருக்கும். அதனால்தான் ஒவ்வொரு பாடசாலைக்கும் தனித்தனியாக போக்குவரத்தை ஒதுக்க முடியுமா என்பது குறித்து ஆலோசித்து வருகின்றோம். இது ஒரு சுலபமான காரியம் அல்ல, இருப்பினும் நாங்கள் அதைச் செய்ய முயற்சிக்கிறோம் என்று அமைச்சர் தெரிவித்தார்.

பாடசாலைகளுக்குக் குறிப்பிடப்பட்டுள்ள சில வழிகாட்டுதல்களில் ஒவ்வொரு வகுப்பறையிலும் நாற்காலிகள் இடையேயான தூரம், மாணவர்கள் அடிக்கடி கைகளை கழுவுதல் மற்றும் முகக்கவசம் அணிவதை உறுதி செய்தல் ஆகியவை அடங்கும்.

இருப்பினும், ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு, சுகாதார அதிகாரிகளின் ஆலோசனை பெறப்பட்டுள்ளது. ஏனெனில், அவர்கள் முகக்கவசம் அணிவது நடைமுறையில் இருக்காது என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (த)



# வெட்டுக்கிளி போன்று திருவையாறில் உயிரினம்

கிளிநொச்சி, ஜூன் 5

கிளிநொச்சி திருவையாறு பகுதியில் வெட்டுக்கிளி போன்ற உயிரினம் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் விவசாயி ஒருவரின் வீட்டில் குறித்த வெட்டுக்கிளி அடையாளம் காணப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் காலை விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது சில வெட்டுக்கிளிகள் பறந்து சென்றன என்றும் மிகுந்த பிரயத்தனத்தின் மத்தியில் ஒன்றை பிடித்தேன் என்றும் அந்த விவசாயி தெரிவித்தார்.

இதுபோன்று படையெடுக்கும் சாத்தியம் ஏற்படின் விவசாயிகள் பெரும் சவால்களுக்கு முகம் கொடுக்க நேரிடும். இவற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (த-6)

## இரு சமுர்த்தி அலுவலர்களின்

# இடமாற்றங்கள் இடைநிறுத்தம்

மன்னார், ஜூன் 5

மன்னார் மாவட்டத்தில் இரண்டு மாதங்களுக்கு முன்னர் மன்னார் மற்றும் நானாட்டான் பகுதி சமுர்த்தி அலுவலர்கள் மன்னார் மாவட்டச் செயலரால் இடமாற்றம் செய்யப்பட்டிருந்த நிலையில், அந்த இடமாற்றங்களை தேர்தல்கள் ஆணைக்குழு இடைநிறுத்தியுள்ளது.

இது பற்றி எழுத்து மூலமாக மன்னார் மாவட்டச் செயலகத்துக்குஆணைக்குழு கடிதம் அனுப்பியுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் சட்டத்தின் பிரகாரம் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் இடமாற்றங்கள் நியமனங்கள் பொதுச் சொத்துக்களை தவறாக பயன்படுத்துதல் தடை செய்யப்பட்டுள்ளது. எங்களுக்குக் கிடைத்த அதிக முறைப்பாடுகளின்படி தங்களால் கடந்த மார்ச் 2ஆம் திகதி வழங்கப்பட்ட சமுர்த்தி அலுவலர்களின் இடமாற்றங்களை உடனடியாக நடைமுறைக்கு வரும்படி நிறுத்தவும் என்று கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

எஸ்.ஜெலன் மற்றும் எம்.எம் அஜ்வாத் ஆகிய இரு சமுர்த்தி அலுவலர்கள் பற்றியும் மாவட்டச் செயலருக்கு முறைப்பாடு கிடைத்ததாக கடந்த மாதம் தற்காலிகமாக உடனடி இடமாற்றம் செய்யப்பட்டனர். (த-213,105)



# கூட்டணியின் அலுவலகம் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 5

தமிழ் மக்கள் கூட்டணியின் மாவட்ட அலுவலகம், திருநெல்வேலியில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இன்று முற்பகல் 09:30 மணியளவில் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் இது திறந்துவைக்கப்பட்டது.

தற்போதுள்ள கொரோனா இடர்காலத்தை கருத்திற்கொண்டு, மிக எளிமையாக இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டதாக கட்சியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நிகழ்வில் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.அருந்தவபாலன், ரி.சிற்பரன், கட்சியின் பொருளாளர் பேராசிரியர் சிவநாதன் மற்றும் எஸ். இரத்தினகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-26)

# கடை அமைப்பதற்கு பெண்ணுக்கு உதவி

கிளிநொச்சி, ஜூன் 5

கிளிநொச்சி கணேசபுரம் பகுதியில் போரால் பாதிக்கப்பட்டு கை ஒன்று பாதிக்கப்பட்டு, பெற்றோரை இழந்துள்ள பேரப்பிள்ளைகளை வளர்த்துவரும் தாய்க்கு வாழ்வாதார முயற்சியாக கடை அமைப்பதற்கென ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

புலம்பெயர் தேசத்தில் வாழ்ந்துவரும் கஜீபன் கண்ணதாசனின் நிதியில் இவை வழங்கப்பட்டன.

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 'உயர்த்தும் கரங்கள்' செயற்றிட்டத்தின் கீழ் சங்க உறுப்பினர்கள் இவற்றைக் கொண்டு சென்று வழங்கியிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-222)



# மணல் அகழ்வை தடுக்கவென 13 இடங்களில் காவலரண்கள்

கிளிநொச்சி, ஜூன் 5

கிளிநொச்சி இரணைமடு மற்றும் அதனை அண்டிய சூழலில் மேற்கொள்ளப்பட்டுவரும் சட்டவிரோத மணல் அகழ்வை தடுக்க அடையாளம் காணப்பட்டுள்ள 13 இடங்களில் பொலிஸ், இராணுவம், விமானப்படையினர் ஆகியோரின் காவலரண்களை அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு பிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர் காரியாலயத்தில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இரணைமடுக் குளத்தின் வலது, இடது புறங்கள் மற்றும் குளத்தை அண்டிய பகுதிகளில் அதிகளவில் சட்டவிரோத மணல் அகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இதற்கு பலரும் கடும் கண்டனம் வெளியிட்டு வந்தனர். இந்நிலையில் நீர்ப்பாசனத்திணைக்களத்தினர், கனியவளத் திணைக்களத்தினர், மாவட்டச் செயலகத்தினர் ஆகியோர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரை சந்தித்து கலந்துரையாடினர். இதன் போதே மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.

அத்தோடு அடிக்கடி களப் பயணம் மேற்கொள்வதற்காக கிளிநொச்சி பிரதிநீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு பொலிஸ் அலுவலர்களை அனுப்பவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-214)

# இறந்த மீனவருக்காக பாசையூரில் அஞ்சலி

கடலுக்கு மீன்பிடிக்கச் சென்று உயிரிழந்த இளைஞனுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக சக மீனவர்கள் நேற்று தொழிலுக்குச் செல்லாது, துக்கம் கடைப்பிடித்தனர். கடற்றொழில் சங்கத்தின் கொடியையும் அரைக்கம்பத்தில் பறக்கவிட்டு அஞ்சலி செலுத்தினார்கள்.

பாசையூர் கடற்றொழிலாளர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில், உயிர் நீத்த சக தொழிலாளருக்காக, அனைத்து தொழிலாளர்களும், தொழிலுக்குச் செல்லாது, சோக கீதம் இசைக்கவிட்டு அஞ்சலி செலுத்தினர். (த-106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லையில் மைதானத்துக்கென கரைச்சிக்குடியிருப்பில் 22 ஏக்கர்

**முல்லைத்தீவு, ஜூன் 5**

**முல்லைத்தீவு மாவட்டத்தில் தேசிய விளையாட்டு மைதானம் அமைக்க கரைச்சிக்குடியிருப்பு பகுதியில் 22 ஏக்கர் அரச காணி தெரிவு செய்யப்பட்டுள்ளது. அதை மாவட்டச் செயலர் மற்றும் நிலஅளவைத் திணைக்களத்தினர் பார்வையிட்டு அடையாளப்படுத்தியுள்ளனர்.**



முல்லைத்தீவு மாவட்டத்தில் தேசிய விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு 2016ஆம் ஆண்டு அரசு தீர்மானித்து மாவட்டச் செயலாளரின் ஏற்பாட்டின் கீழ் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளரால் முள்ளிவாய்க்கால் கிழக்குப்பகுதியில் இடம் ஒதுக்கப்பட்டது.

மைதானம் அமைக்கும் நடவடிக்கை நடைபெறாத நிலையில் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒன்றியம் பல தடவைகள் அரச அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டுசென்றும் பயனளிக்கவில்லை.

ஏற்கனவே ஒதுக்கப்பட்ட காணியில் பொதுமக்களின் காணிகளும் உள்ளடங்குகின்றன. இவ்வாறு பல்வேறு பிரச்சினைகளால் அந்த இடத்தில் மைதானம் அமைக்கும் பணி தாமதமாவதாகத் தெரிவிக்கப்பட்டுவந்தது.

இந்தநிலையிலேயே வேறு இடத்தில் அரசகாணியை அடையாளப்படுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட தேசிய விளையாட்டு அரங்கம் அமைக்க 2016 ஆம் ஆண்டு முன்மொழிவுகள் வைக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டு அமைச்சரவையால் 50 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

2019இல் அரசின் நாடாளுமன்றக் கலைப்புடன் முன்னைய விளையாட்ட ரங்கம் அமைப்பதற்கான பணி முடக்கப்பட்டிருந்தது என்று முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒன்றியம் தெரிவித்தது. (த-19)

# கறவைப் பசுக்களை இறக்குமதி செய்யாதீர்

## அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

வவுனியா, ஜூன் 5

இலங்கைக்கு மீண்டும் கறவைப் பசுக்களை கொண்டுவரும் திட்டம் செயற்படுத்தப்பட்டால் அதற்கு எதிர்ப்பை வெளிப்படுத்துவோம் என்று இலங்கை அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சங்கத்தின் உப செயலாளர் எஸ்.சுகிர்தன் வெளியிட்ட செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இலங்கையின் பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் பல்வேறு காலப் பகுதிகளில் கறவைப் பசுக்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. நாட்டின் நாளாந்த பால் தேவை 3.2மில்லியன் லீற்றராக இருக்கும் நிலையில், 1.2 மில்லியன் லீற்றர் பாலே தேசிய ரீதியில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. இவற்றில் 95 வீதமான பால் சிறிய மற்றும் நடுத்தர பண்ணையாளர்களால் உற்பத்தி செய்யப்படுகின்றது. மேலதிகமாக தேவைப்படும் 2 மில்லியன் லீற்றர் பால் தேவை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் பால்மா மூலம் ஈடுசெய்யப்படுகின்றது. இதற்காக அரசு வருடமொன்றுக்கு 55 பில்லியன் ரூபா செலவிடுகின்றது.

இந்த செலவைக் குறைக்க உள்ளூர் பால் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய தேவை அரசுக்கு ஏற்பட்டிருந்தது. இதன் ஒருகட்டமாக 2017 ஆம் ஆண்டு 2ஆயிரத்து 500 கறவைப் பசுக்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட 75 வீதத்துக்கும் மேலதிகமான பசுக்கள் தரங்குறைந்தவையாகவும், பால் உற்பத்தி குறைந்தனவாகவும் காணப்பட்டன. அவற்றுக்கான உணவுத் தட்டுப்பாடு மற்றும் பல காரணிகளால் அந்தத் திட்டம் தோல்வியடைந்தது.

இது தொடர்பாக எமது சங்கம் அரசுக்கு எழுத்து மூலமாகச் சுட்டிக்காட்டியிருந்தது. எதிர்காலத்தில் கடைப்பிடிக்கவேண்டிய நடைமுறைகள் தொடர்பாகவும் விளக்கமளித்திருந்தது. எனவே மீண்டும் இலங்கைக்கு கறவைப் பசுக்களை கொண்டுவரும் திட்டம் செயற்படுத்தப்படும் பட்சத்தில் அது தொடர்பாக எதிர்ப்பை வெளிப்படுத்துவோம்.

கடந்த 26 ஆம் திகதி அமைச்சர் சமல்ராஜபக்ஷ சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்தில் 2ஆயிரத்து 500 கறவைப்பசுக்கள் இனவிருத்தி நோக்கத்துக்காக தேசிய பண்ணைகளுக்கு இறக்குமதி செய்வதுடன், சிறிய மற்றும் நடுத்தர பண்ணைகளை மேம்படுத்தல், செயற்கை முறை சினைப்படுத்தலை மேம்படுத்தல் கன்னிப் பசு வளர்ப்பு திட்டத்தை மேம்படுத்தல், கால்நடை வைத்திய சேவையை வலுவூட்டுதல் உட்பட பல விடயங்கள் எமது சங்கத்தின் முன்மொழிவாக காணப்படுகின்றன. இந்த விடயங்களுக்கு எமது சங்கம் முழுமையான ஆதரவை வழங்கும். இந்தத் திட்டத்தை எமது சங்கம் தொடர்ச்சியாக அவதானித்து வருகின்றது. அவற்றில் ஏதும் தவறுகள் இடம்பெறுமாயின் அது தொடர்பாக அரசுக்கு சுட்டிக்காட்டவும் சங்கம் தவறாது - என்றுள்ளது. (த-110)

# சிட்டிவேரம் கண்ணகை அலங்காரத் திருவிழா

தென்மராட்சி வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் கோவில் வருடாந்தத் திருவிழா நிபந்தனைகளுடன் அலங்காரத் திருவிழாவாக நடத்த முடிவுசெய்யப்பட்டுள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பிரதேச செயலர் திருமதி உ. சுபலிங்கம் தலைமையில் நடைபெற்ற கோவில் திருவிழா நடத்துவது தொடர்பான கலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

வருடாந்த விசாகப் பொங்கல் நிகழ்வில் பிரதான வழந்துப் பானையில் மட்டும் பொங்கல் மேற்கொள்வதென்றும் பின்வரும் நிபந்தனைகளுடன் திருவிழாக்களை நடத்துவது என்றும் முடிவுசெய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, திருவிழாக்கள் உட்பிரகார கிரியைகள் மட்டும் நடத்துதல், ஆலய தவில் நாதஸ்வரம் மட்டும் பயன்படுத்தல், ஒலி பெருக்கி பயன்படுத்த தடை, அன்னதானம் நடத்ததடை, திருவிழாஉபயகாரர்கள் 25 பேர் மட்டும் கலந்து கொள்ளல், திருவிழா வில் தேர் மற்றும் தீர்த்த திருவிழா நடத்துவதில்லை, தற்போது ஆலயவளாகத்தில்உள்ள கடைகளுக்கு மேலதிகமா கடைகள் அமைக்கத்தடை, கிரியைகள் தினமும் காலை 5மணிதொடக்கம் மாலை 6 மணிவரை நடத்துதல், சுகாதார விதிமுறைகளின்படி முகக்கவசம் அணிதல், கை கழுவும்வசதி மற்றும்தனியாள் இடைவெளி பேணல், வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் பங்குபற்றத்தடை, தினமும் பொலிஸார், சுகாதாரப் பகுதியினர், பிரதேச செயலக அலுவலர்கள் கண்காணிப்பு, தேவைப்படின் படையினரின் உதவி பெறல், குடிதண்ணீர் தேவைகளை, சாவகச்சேரி பிரதேச சபையினரிடம் பெறுதல் என்று தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

கலந்துரையாடலில் கலாசார அலுவலர், இந்துசமய விவகார அலுவலர், கலாசார அபிவிருத்தி அலுவலர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர், சாவகச்சேரி பிரதேச சபை அலுவலர், மேற்பார்வை கிராம அலுவலர், கோவில் நிர்வாகத்தினர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (த-9)

# ஊரடங்கில்விளையாடிய 10 இளைஞர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 5

நாவற்குழி பகுதியில் ஊரடங்கு சட்டத்தை மீறினார்கள் எனும் குற்றசாட்டில் 10 இளைஞர்களை சாவகச்சேரி பொலிசார் நேற்றுக் கைது செய்தனர்.

ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ள நிலையில் நாவற்குழி பகுதியில் உள்ள மைதானம் ஒன்றில் இளைஞர்கள் விளையாடிக்கொண்டு இருந்த போது அவர்கள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட 10 இளைஞர்களையும் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்ற பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் கடுமையாக எச்சரித்து பொலிஸ் பிணையில் விடுவித்துள்ளனர். (ம-26)

# மன்னார் சுகாதார பணிப்பாளர் முல்லையிலும் மேலதிக பணி

முல்லைத்தீவு, ஜூன் 5

முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக மருத்துவர் வினோதன் பொறுப்பேற்றுள்ளார்.

இவர் தற்போது நிர்வகித்துவரும் மன்னார் மாவட்டத்தின் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவியுடன் மேலதிகமாக முல்லைத்தீவு மாவட்டத்தையும் பொறுப்பு ஏற்கும்படி கடந்த 15ஆம் திகதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க கடிதம் அனுப்பியிருந்தார். அதன்படி நேற்று அவர் பொறுப்பேற்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதுவரை முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக தற்காலிகமாக கடமையாற்றிய மருத்துவர் சுகந்தன் புதுக்குடியிருப்பு மருத்துவமனை அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, மன்னார் சுகாதார சேவைகள் பணிப்பாளராகப் பொறுப்பேற்ற மருத்துவர் வினோதனுக்கு நேற்று திணைக்களத்தில் வரவேற்பளிக்கப்பட்டது. முல்லை அபிவிருத்தி ஒன்றியம் மற்றும் பொதுமக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இதை ஏற்பாடு செய்திருந்தனர். (த-19)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிவகுமாரனின் நினைவு தினம் சனிக்கிழமை

போராட்டத்தின் முதல் வித்தான பொன். சிவகுமாரனின்44ஆவது ஆண்டு நினைவுதினம் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கடைப்பிடிக்கப்படவுள்ளதாக வலி. கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

உரும்பிராய் மண்ணின் மைந்தனான பொன். சிவகுமாரன் 1974 ஆம் ஆண்டு ஜூன் 5 ஆம் திகதி உரும்பிராய் பகுதியில் பொலிஸாரின் சுற்றிவளைப்பில் சயனைட் அருந்தி மாலை 6.15 மணிக்கு வீரச்சாவடைந்தார். அவரின் திருவுருவச்சிலை உரும்பிராய் சந்தியில் அமைக்கப்பட்டுள்ளது.

அந்த வளாகத்தில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இந்தச் சிலை முன்பு பொது அஞ்சலிக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தற்போதைய கொரோனாச் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு சகலரும் அஞ்சலி செலுத்தும் முகமாகவே சனிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உரிய சுகாதார பாதுகாப்பு ஏற்பாடுகள், சமூக இடைவெளியுடன் அஞ்சலி செலுத்துவதற்கான ஏற்பாடுகளை பிரதேச சபை மேற்கொண்டுள்ளது.

அஞ்சலி செலுத்தும் பகுதி துப்புரவு செய்யப்பட்டு தொற்று நீக்கி தெளிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் கலந்துகொள்பவர்கள் முகக்கவசங்களை அணிந்திருப்பது கட்டாயம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த)

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

# பெண் குண்டுதாரியின் வீட்டில் நடந்தது என்ன?

## ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம்

**கொழும்பு, ஜூன் 5**

**உயிர்த்த ஞாயிறு நாளன்று தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் ஒரு சம்பவமான, தெமட்டகொடை மஹவில பூங்கா வீட்டில் பெண் தற்கொலைக் குண்டுதாரி குண்டை வெடிக்கச் செய்த போது, அங்கிருந்த இப்ராஹீம் ஹாஜியார் உள்ளிட்ட எவரும் அதிர்ச்சியடையவில்லை. குண்டை அந்தப் பெண் வெடிக்கச் செய்ய முன்னர் பொலிஸார் அங்கு சென்ற போதும் அந்த வீட்டிலிருந்த பல பெண்கள் அழுது கொண்டிருந்ததாகவும் சி.சி.டி. எனப்படும் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் முன்னாள் சார்ஜன் தர உத்தியோகத்தரும் தற்போது வத்தளை பொலிஸ் நிலையத்தில் சார்ஜனாக கடமையாற்றுபவருமான வசந்த சிசிர குமார சாட்சியமளித்தார்.**

உயிர்த்த ஞாயிறு அன்று இடம்பெற்ற தொடர் தற்கொலைத் தாக்குதல்களை மையப்படுத்தி விசாரணைகளை முன்னெடுக்க, கடந்த ஆண்டு செப்ரெம்பர் 21 ஆம் திகதி நியமிக்கப்பட்ட ஐவர் கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் சாட்சி விசாரணைகள் பண்டா ரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் அமைந்துள்ள ஆணைக் குழுவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. 406 ஆவது சாட்சியாளராக ஆணைக் குழு முன்னிலையில் சட்ட மா அதிபர் திணைக்கள சட்டவாதிகளின் நெறிப்படுத்தலில் சார்ஜன் வசந்த சிசிர குமார சாட்சியமளித்தார். அதன்போதே அவர் மேற்படி விடயத்தை வெளிப்படுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2016ஆம் ஆண்டு முதல் கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவில் நான் சேவையாற்றினேன். 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி காலை வழமை போன்று நான் கடமைக்கு சமூகமளித்தேன். நாட்டில் தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பிலான தகவல்கள் கிடைத்தன. இவ்வாறான பின்னணியில், சி.சி.டி.யின் நிர்வாகப் பொறுப்பதிகாரியாக இருந்த பொலிஸ் பரிசோதகர் களுபான எனக்கு உப பொலிஸ் பரிசோதகர் ரோஹன பண்டாரவுடன் சுற்றி வளைப்பொன்றுக்கு செல்ல ஆலோசனை வழங்கினார். சிவில் உடையில் உடனடியாக நாம் செல்ல தயாரானோம். உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரோஹன பண்டார, உதவி பொலிஸ் அத்தியட்சகர் சோமரத்னவிடம் இருந்து கிடைத்த தகவலுக்கமைய சுற்றிவளைப்புக்குச் செல்வதாக எம்மிடம் கூறினார். நாம் 6 பேர் சுற்றி வளைப்புக்கு லேண்ட் குறூஷர் வாகனத்தில் சென்றோம். உப பொலிஸ் பரிசோதகர் ரோஹன பண்டாரவிடம் மட்டும் அவரது கடமை நேர கைத்துப்பாக்கியும் 10 தோட்டாக்களும் இருந்தன. அதனைவிட கைவிலங்குகளையும் நாம் அவரது ஆலோசனைக்கு அமைய எடுத்துக்கொண்டோம்.

வாகனத்தில் செல்லும் போதே நாம் இலக்கம் 658/90 எனும் முகவரியில் உள்ள வீட்டுக்கே சுற்றிவளைப்புக்குச் செல்வது தெரிந்தது. அங்கு நாம் குண்டுகளை அல்லது வெடி பொருடள்களைத் தேடிச் செல்கின்றோம் எனத் தெரியவில்லை. அப்படி நினைத்துக் கூட பார்க்கவில்லை. சட்ட விரோத பொருள்கள் அல்லது குண்டுத்தாக்குதல்களுடன் தொடர்புடைய எவரேனும் மறைந்துள்ளதால் வீட்டைச் சோதனை செய்யப் போவதாகவே நாம் எண்ணினோம். மஹவில பூங்கா வீதியில் உரிய வீட்டு இலக்கத்தை, அவ்வீட்டின் மதிலில் பொறிக்கப்பட்டிருந்த பலகையில் இருந்து அடையாளம் கண்டோம். முதலில் உப பொலிஸ் பரிசோதகர் ரோஹன பண்டார சென்று வீட்டின் பிரதான வாயிலை தட்டினார். நாம் பின்னே இருந்தோம். அப்போது சற்று வயதான ஒருவர் வந்து வாயிலைத் திறந்தார். பின்னர் அவர் தான் இப்ராஹீம் ஹாஜியார் என்று அறிந்து கொண்டேன். அங்கு மேலும் இரு ஆண்கள் இருந்தனர். அவ்விருவரையும் சோதனை செய்யுமாறு உப பொலிஸ் பரிசோதகர் ரோஹன பண்டார எம்முடன் வந்த கொன்ஸ்டபிள் பெரேராவுக்கு பொறுப்புச் சாட்டினார்.

அந்த வீடு மூன்று கீழ் தளத்தைத் தவிர்த்து 2 மாடிகளைக் கொண்டது. நாம் அங்கு உள் நுழையும் போதே சி.ஐ.டி.யின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இந்திக லொக்குஹெட்டியும் அவரது குழுவும் கூட அங்கு வந்தனர். லொக்கு ஹெட்டியின் கீழ் நான் சேவையாற்றியுள்ளதால் அவரை உடனடியாக அடையாளம் கண்டுகொண்டேன். பின்னர் நாம் உள்ளே செல்லும் போது உதவி பொலிஸ் அத்தி யட்சர் இந்திக லொக்கு ஹெட்டி, இப்ராஹீம் ஹாஜியாரை விசாரித்துக்கொண்டிருந்தார். நாம் மேல் மாடி நோக்கி செல்லலானோம். அப்போது இருபடிகளை ஏறிய பின்னர் உப பொலிஸ் பரிசோதகர் ரோஹன பண்டார, என்னை நோக்கி கீழ் தளத்தில் சில பெண்கள் இருப்பதாகவும் அவர்களை சோதனைச் செய்யுமாறும் கூறி என்னை அனுப்பிவிட்டு துலஞ்சன, பண்டார ஆகிய சக உத்தியோகத்தர்களுடன் அவர் மேல் தளத்துக்கு சென்றார்.

நான் கீழ் தளத்தில் ஒரு அறையில் சில பெண்கள் இருப்பதையும் சமையலறையில் சில பெண்கள் இருப்பதையும் அவதானித்து அவர்களை ஒரு இடத்தில் ஒன்று சேர்த்தேன். அப்போதும் அவர்களில் சிலர் அழுதுகொண்டு இருந்ததை நான் அவதானித்தேன். வீட்டைச் சோதனை செய்ய அங்கிருந்த எவரும் எதிர்ப்பு வெளிக்காட்டவில்லை. இந்த நிலையில் மேல் மாடியில் அறையின் கதவை ரோஹன சேர் தட்டும் சத்தம் எனக்கு கேட்டது.

'நாங்கள் பொலிஸ்... சோதனை செய்ய வேண்டும்.. கதவைத் திறவுங்கள்' என்று அவர் பலமாக கதவை தட்டினார். அப்போது பெரிய வெடிப்புச் சத்தம் கேட்டது. அந்த சத்தத்துடன் நாங்கள் அனைவரும் வெளியே ஓடினோம். சி.ஐடி உதவி பொலிஸ் அத்தியட்சகர் இந்திக லொக்கு ஹெட்டி உள்ளிட்ட அனைவரும் பாதைக்கு ஓடினோம். வீட்டின் கீழ் தளத்தில் இருந்த பெண்கள் ஏனைய ஆண்கள் மூவர் உள்ளிட்டோரையும் வெளியே அழைத்து வந்தோம். எனினும் மேல் மாடிக்கு சென்ற ரோஹன சேர் தலைமையிலான மூவருக்கும் என்ன நடந்தது என்று தெரியவில்லை. நான் ரோஹன சேர் என்று பலமாக கத்தி கத்திக் கூப்பிட்டேன். எந்தப் பதிலும் இல்லை. வீடு முழுக்க புகை மண்டலமாக காட்சியளித்தது. தீயும் பரவியது. அவ்வேளை நான் உடனடியாக எனது நிர்வாக அதிகாரிக்கு கதைத்து மேலதிக படையினரை அனுப்புமாறும், வெடிப்பு இடம்பெற்றதையும் கூறினேன். அதன் பின்னர் 10 நிமிடங்களுக்குள் அதிரடிப்படை, இராணுவம், தீயணைப்பு படை என அனைவரும் வந்தனர். அப்போதும் மேல் மாடி நோக்கி யாராலும் செல்ல முடியவில்லை. இதனிடையே மின்சாரத்தை தடை செய்ய உதவி பொலிஸ் அத்தியட்சர் லொக்கு ஹெட்டி, இப்ராஹீம் ஹாஜியாரை அழைத்துச் சென்றார். மேலே செல்வது சாத்தியமற்று காணப்பட்ட நிலையிலேயே மின்சார இணைப்பை தடை செய்ய அவர் அவ்வாறு முயன்றார்.


முதல் வெடிப்பு பதிவாகி 15 20 நிமிட இடைவெளியில் மீளவும் ஒரு வெடிப்புச் சத்தம் கேட்டது. அப்போதும் நாம் வெளியே ஓடி வந்தோம். அதன் பின்னர் அதிரடிப் படையினர் வீட்டின் மற்றொரு பகுதி ஊடாக ஏணியொன்றின் உதவியுடன் உள் நுழைந்தனர்.

அப்போது எமது 3 சக உத்தியோகத்தர்களையும் காணவில்லை. நாமெல்லாம் மேல் மாடிக்கு சென்று தேடும் போது, ரோஹன சேர் கதவை தட்டிய பகுதியின் சுவர் முற்றாக இடிந்து மண், கல் உள்ளிட்டவற்றால் நிறைந்திருந்தை அவதானித்தேன். அப்போது ரோஹன சேரின் கால் தெரிந்தது. உடனடியாக மண்ணை அகற்றி பார்த்த போது அவர் உயிரிழந்த நிலையில் இருந்தார். அவருக்கு அருகே துலஞ்சன உள்ளிட்ட ஏனைய இரு அதிகாரிகளும் கூட உயிரிழந்த நிலையில் இருந்தனர். அவர்களது நெற்றிப் பகுதிகள், கால் பகுதிகள் கடுமையாக காயப்பட்டிருந்தை அவதானிக்க முடிந்தது. அந்த வீட்டிலிருந்து கைது செய்யப்பட்டோரை விசாரணைக்காக சி.ஐ.டி.யினரிடம் கையளித்தோம், என்று சாட்சியமளித்தார்.

இந்நிலையில் இதுவரை வெளிப்படுத்தப்படாத, சி.ஐ.டி.யின் மனிதப் படுகொலைகள் விசாரணைப் பிரிவின் பெண் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் வழங்கிய சி.சி.ரி.வி. காணொலிகள் ஊடகங்களுக்கும் காண்பிக்கப்பட்டு மேலதிக சாட்சிகள் சார்ஜன் வசந்த சிசிர குமாரவிடம் பதிவு செய்யப்பட்டது.

சி.சி.ரி.வி. காணொலி பிரகாரம், பிற்பகல் 2.31 மணிக்கே சி.சி.டி. குழு மஹவில பூங்கா வீட்டுக்குள் உள்நுழைவது சில நிமிடங்களில் முதல் வெடிப்பு இடம்பெறுவதும், அதன்போது பொலிஸ் அதிகாரிகள் வீட்டில் இருந்தோருடன் வெளியே ஓடி வருவதும் தெளிவாகப் பதிவாகியுள்ளது. அந்த சி.சி.ரி.வி. காட்சிகளை பரிசீலனை செய்த போது, அவ்வீட்டில் இருந்தவர்கள் எந்த அதிர்ச்சியும் இன்றி இருந்ததை தான் அவதானித்ததாக சாட்சியம் அளித்த சார்ஜன் வசந்த சிசிர குமார, இந்த தாக்குதல்களை அவர்கள் முன் கூட்டியே அறிந்திருந்ததாக தனக்கு எண்ணத் தோன்றுகின்றது - என்று தெரிவித்தார். (ஒ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விசமிகளால் ஒட்டோவுக்கு தீ

யாழ்ப்பாணம், ஜுன் 5
இணுவில் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டியொன்று விசமிகளால் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளதாக அதன் உரிமையாளரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம)

# ஜனாதிபதியின் கையொப்பத்தை மோசடி செய்தவர் கைதானார்


கொழும்பு, ஜுன் 5
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் கையொப்பத்தையும், கடிதத்தலைப்பையும் மோசடியாக பயன்படுத்திய வங்கி ஊழியர் கைது செய்யப்பட்டுள்ளார்.
இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு அனுப்பியுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:
குருநாகலை சேர்ந்த குமார என்பவர் பணி தடையில் இருந்துள்ள நிலையில் தமக்கு வங்கியில் சம்பள கொடுப்பனவுகள் மற்றும் பதவி உயர்வுகளுடன் பணிக்கு மீண்டும் சேவையில் அமர்த்துமாறு குறிப்பிட்டு ஜனாதிபதியின் கடித தலைப்பையும், கையொப்பத்தையும் இட்டு கடிதமொன்றை இலங்கை வங்கி தலைவருக்கு அனுப்பியுள்ளார்.
இந்த நிலையில் அந்தக் கடிதம் போலியானது என உறுதிபடுத்தப்பட்டதை தொடர்ந்து வங்கி தலைமையகத்துக்கு அவர் அழைக்கப்பட்ட நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார். ஆவணத்தை தயார் செய்ய பயன்படுத்திய மடிக்கணனி, ஏனைய உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன - என்றுள்ளது. (ம)

# கிணற்றில் இருந்து பெண் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, ஜுன் 5
வீட்டுக் கிணற்றில் இருந்து பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.
இந்தச் சம்பவம் காத்தான்குடி 3 ஆம் குறிச்சி பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. 52 வயதான பெண்ணே சடலமா மீட்கப்பட்டார்.
சம்பவ இடத்துக்கு வந்த காத்தான்குடி பொலிஸார் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர்.
சம்பவம் தொடர்பாகக் காத்தாங்குடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஊவா, தென் மாகாணங்களிலும் வெட்டுக்கிளிகளின் தாக்கம்

குருணாகல், ஜூன் 5
**குருணாகல் மாவத்தகம பகுதியில் தாக்கம் செலுத்திய வெட்டுக்கிளிகள் ஊவா, தென் மாகாணங்களுக்கும் பரவியுள்ளதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.**



ஊவா, தென் மாகாணங்களில் வெட்டுக்கிளிகள் பரவியுள்ளமை அவதானிக்க கூடியதாக இருப்பதாக அந்த மாகாண விவசாயச் சபை அதிகாரிகள் விவசாய திணைக்களத்தின் அவதானத்துக்கு கொண்டுவந்துள்ளனர்.
இதைத் தவிர மாவனெல்லை வரக்காபொல ஆகிய பகுதிகளில் இந்த வெட்டுக்கிளிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மாவத்தகம பகுதியில் பரவியுள்ள வெட்டுக்கிளிகளின் தாக்கம் ஓரளவுக்கு கட்டுபாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் டப்லியூ. ஏ.டப்லியூ. தென்னகோன் தெரிவித்தார்.
வெட்டுக்கிளிகளின் தாக்கத்தால் வாழை , தென்னை , மா, கோப்பி , மரவள்ளி ஆகியவற்றுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# ஹோட்டலை திறக்க அனுமதி வழங்காவிட்டால் முறைப்பாடு

*ஹோட்டல் உரிமையாளர் சங்கம் வலியுறுத்து*

கொழும்பு, ஜுன் 5
கொழும்பிலுள்ள ஹோட்டல்களைத் திறப்பதற்கு அனுமதி வழங்காவிட்டால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடத் தீர்மானித்துள்ளோம் என்று ஹோட்டல் உரிமையாளர் சங்கம் எச்சரித்துள்ளது.
அதேவேளை, சுகாதார அமைச்சு அனுமதியளிக்கும் பட்சத்தில் ஹோட்டல்களைத் திறப்பதற்கான அனுமதியை வழங்கத் தயார் என்று கொழும்பு மாநகர சபையின் பிரதம வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.
கொழும்பு நகர் உட்பட நாடளாவிய ரீதியில் சுமார் 2 இலட்சத்துக்கும் அதிகமான ஹோட்டல்கள் உள்ளன. கடந்த 2 மாதங்களுக்கு மேலாக இவை மூடப்பட்டு உள்ளதால் ஹோட்டல் உரிமையாளர்கள் பெரும் பொருளாதாரப் பின்னடைவை எதிர்நோக்கியுள்ளனர். இந்தநிலையிலேயே ஹோட்டல் உரிமையாளர் சங்கம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.
இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த கொழும்பு மாநகர சபையின் பிரதம வைத்திய அதிகாரி ருவன் விஜயமுனி, விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க ஹோட்டல்களைத் திறப்பதற்குச் சாதகமான சூழ்நிலை உள்ளது என்று அறிவித்தால், அவற்றைத் திறக்க அனுமதி வழங்கப்படும் என்று தெரிவித்தார். (எ)

# இளம் குடும்ப பெண் கழுத்து நெரித்துக் கொலை

மட்டக்களப்பு, ஜுன் 5
இளம் பெண்ணொருவர் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் பெண்ணின் கணவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்தக் கொலைச் சம்பவம் மட்டக்களப்பின் ஏறாவூர்ப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. குறித்த பெண் கடந்த 9 தினங்களுக்கு முன்னர் இரண்டாவது திருமணம் செய்து கொண்டார் என்று உறவினர்கள் தெரிவித்தனர். பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.
கொலைச் சம்பவம் தொடர்பில் ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஜனாதிபதி செயலணியில் தனிச் சிங்கள உறுப்பினர்கள்

*உமாச்சந்திர பிரகாஷ் கவலை*

திருகோணமலை, ஜுன் 5
கிழக்கில் உள்ள மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட செயலணியில் தனிச் சிங்கள உறுப்பினர்கள் உள்வாங்கப்பட்டுள்ளமை தொடர்பில் கவலையடைவதாகவும் அதற்கான வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளமை தொடர்பில் தனது கண்டனத்தை வெளிப்படுத்தவதாகவும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் உமாச்சந்திர பிரகாஷ் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.
அத்துடன் இலங்கையில் ஜனநாயகப் பண்புகளை மதிக்கும் தன்மை நலிவுற்று, ஆதிக்க ஆட்சிமுறை மாற்றமுறுகிறதா? எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.
அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:
இலங்கையின் மரபுரிமைகளைப் பாதுகாத்து எதிர்காலச் சந்ததியினருக்கு உரித்தாக்கிக் கொடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். ஆயினும் கிழக்கு மாகாணம் தமிழ், முஸ்லீம் மற்றும் சிங்கள மக்கள் பூர்வீகமாக வாழ்ந்து வரும் பிரதேசங்களாகும். ஆயினும் அதைக் கவனத்தில் எடுக்காமல், கிழக்கில் உள்ள மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட செயலணியில் தனிச் சிங்கள உறுப்பினர்கள் உள்வாங்கப்பட்டுள்ளமை தொடர்பில் கவலையடைகிறேன். எதிர்காலத்தில் கிழக்கு மாகாணத்தில் அடையாளப்படுத்தப்படும் தமிழ் மற்றும் முஸ்லீம் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த மரபுரிமைச் சின்னங்களுக்கு என்ன நடக்கும் என்ற கேள்வி எம் மக்கள் மனதில் தோன்றுவது தவிர்க்க முடியாது. அவ்வாறு அடையாளம் காணப்படும் இடங்கள் எம் மக்களின் வரலாறு மற்றும் வாழ்வியலுடன் அங்கீகரிக்கப்பட்டு, தொல்பொருள் பாதுகாப்பு மற்றும் மீள்நிர்மாணித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளும் நோக்குடன் இன, மத பேதமற்ற செயலணி ஒன்று உருவாக்கப்படாமை ஜனநாயகப் பண்புகளை மீறும் செயலாகும்.
இலங்கையில் ஜனநாயகப் பண்புகளை மதிக்கும் தன்மை நலிவுற்று, ஆதிக்க ஆட்சிமுறை மாற்றமுறுகிறதா என்ற கேள்வியும் எழுவது தவிர்க்க முடியாது. ஆகவே இலங்கையராக வேற்றுமைகளை களைந்து, சகோதரத்துவத்துடன், ஒரு தாய் பிள்ளைக ளாக வாழ்வதற்கான வழிமுறைகளை அரசாங்கம் உருவாக்க வேண்டும்- என்றுள்ளது (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரஸ் கட்டுப்பட்டதும் தேர்தலை நடத்துங்கள்!

## ஜே.வி.பி. வலியுறுத்துகின்றது

கொழும்பு, ஜூன் 5

பொதுத்தேர்தல் தொடர்பில் அனைவர் மத்தியிலும் எதிர்ப்பை ஏற்படுத்தியுள்ள நீதிமன்றத் தீர்ப்பு வெளியாகியுள்ளது. நாட்டில் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டு ஜனநாயகம் பலப்படுத்தப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

எனினும் நாட்டில் உள்ள வைரஸ் தொற்று முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்ட பின்னர் நீதியானதும், அமைதியானதுமான தேர்தலை நடத்துவதற்குச் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்க்கின்றோம்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தேர்தல் கடமைகளில் ஈடுபட்டுள்ள அரச ஊழியர்களினதும் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டுள்ள

பாதுகாப்பு ஆலோசனைகளை கவனத்தில் கொண்டு தேர்தலுக்கு முன்னர் செயற்பட வேண்டிய விதம், தேர்தலின் போது செயற்பட வேண்டிய முறை மற்றும் தேர்தலின் பின்னர் செயற்படக் கூடிய முறை என்பன பற்றிய ஆலோசனை வழிகாட்டல்கள் வெளியிடப்பட வேண்டும்.

பரப்புரை நடவடிக்கைகளை எவ்வாறு முன்னெடுப்பது, வாக்களிப்பு நிலையங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஏற்பாடுகள், தேர்தலை ஒரே தினத்தில் நடத்துவதா?, அதிகளவான வேட்பாளர்கள் போட்டியிடுவதால் வாக்கு எண்ணும் செயற்பாடுகள் எவ்வாறு முன்னெடுக்கப்படும் என்பவற்றில் தேர்தல்கள் ஆணைக்குழு கவனம் செலுத்த வேண்டும். இந்த விடயங்கள் தொடர்பில் அரசியல் கட்சிகளின் நிலைப்பாடுகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும்.

இவற்றுக்கு அமைய தேசிய மக்கள் சக்தியாக மக்கள் விடுதலை முன்னணி பொதுத் தேர்தலுக்குத் தயாராகும். தேர்தலுக்கான தினம் அறிவிக்கப்பட்டவுடன் நாம் பரப்புரை நடவடிக்கைகளை ஆரம்பிப்போம். நாடாளுமன்றத் தேர்தல் மூலம் நாட்டின் ஜனநாயகத்தை பலப்படுத்துவதற்கு தலைமைத்துவம் வகிப்பதற்கும் தயாராகவுள்ளோம்-என்றார். (எ)

# கொழும்பு புறநகரில் கொரோனா அபாயம்

## சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 5**

**கொழும்பின் புறநகர் பகுதியான ஹோமாகமவில் கொரோனாத் தொற்றுக்கள் ஏற்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக, ஹோமாகம சுகாதார மருத்துவ அதிகாரி ஜகத் குமார தெரிவித்துள்ளார்.**

ஹோமாகம, பிட்டிபன பிரதேசத்தில் கொரோனா தொற்றுக்குள்ளான இராணுவ லெப்டினட் கர்னல் வீட்டிற்கு அருகிலுள்ள 9 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் சேவையில் ஈடுபட்ட குறித்த அதிகாரி வைரஸ் தொற்றுக்குள்ளான பின்னர் அவரது மனைவி மற்றும் ஒரு பிள்ளைக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டதாக உறுதி செய்யப்பட்டது.

இதன் பின்னர் இவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். குறித்த லெப்டினட் கர்னலின் பிள்ளைகள் இருவர் அருகில் உள்ள இரண்டு வீடுகளின் பிள்ளைகளுடன் நீண்ட காலமாக விளையாடச் செல்வதாகத் தகவல் கிடைத்துள்ளது.

எனினும் விமான நிலையத்தில் சேவை செய்து வீட்டுக்கு வந்த நாள் முதல் அந்தச் சிறுவர்கள் அருகில் உள்ள வீடுகளுக்குச் சென்று விளையாடவில்லை என மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. எப்படியிருப்பினும் கொரோனாத் தொற்று ஏற்படும் ஆபத்தை கருத்திற் கொண்டு இந்த இரண்டு குடும்பங்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

எனினும் தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு இதுவரையில் எவ்வித கொரோனா அறிகுறிகளும் காணப்படவில்லை. இலங்கையில் கடந்த ஒரு மாத காலப்பகுதியில் சமூக மட்டத்தில் எந்தவொரு கொரோனா நோயாளர்களும் அடையாளம் காணப்படாத நிலையில், கடந்த வாரம் குறித்த இராணுவ கேர்னல் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்தார் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# ஆலயத்தில் திருட்டு: சந்தேக நபர் கைது!

வெலிமடை, ஜூன் 5

வெலிமடை, கெடகல தோட்டப் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த பெறுமதியான பெறுமதியான பல பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

திருட்டுச் சம்பவம் தொடர்பில் ஆலய நிர்வாகத்தால் கடந்த 2 ஆம் திகதி செய்த முறைப்பாட்டை அடுத்து ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் வழங்கிய தகவலின்படி அந்தப் பிரதேசத்திலுள்ள கற்பாறைகளுக்கு இடையிலான மறைவிடம் ஒன்றிலிருந்து கோயிலில் திருடப்பட்ட குத்து விளக்குகள், தட்டுக்கள், மற்றும் பல வெண்கல பாத்திரங்களை பொலிஸார் கைப்பற்றினர். சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேக நபரைத் தேடி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# 60 உறுப்பினர்களில் 58 பேர் ரணிலுடன்!


கொழும்பு மாநகர சபைக்கு யானைச் சின்னத்தில் போட்டியிட்டுத் தெரிவான 60 உறுப்பினர்களில் 58 பேர் எதிர்வரும் பொதுத்தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு மாநகர சபையில் ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவம் செய்யும் உறுப்பினர்களுடன் விசேட சந்திப்பு ஒன்று கடந்த திங்கட்கிழமை அந்தக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நடந்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இந்தச் சந்திப்பு நடந்துள்ளது. அதிலேயே உறுப்பினர்கள் இவ்வாறு உறுதி வழங்கியுள்ளனர் என்று தெரியவருகின்றது.

மாநகர சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் முழு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். ஐக்கிய மக்கள் சக்திக்கோ அல்லது வேறு எந்த அரசியல் கூட்டணிக்கோ மறைமுகமாகவோ, நேரடியாகவோ ஆதரவளிக்கக் கூடாது என்ற பிரேரணை மாநகர சபை உறுப்பினர் டைடஸ் பெரோராவால் முன்மொழியப்பட்டு, பிரதி மேயர் மொஹமட் இக்பாலால் வழிமொழியப்பட்டது.

கட்சி நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்து சமூகமளிக்காது இருப்பவர்கள் மற்றும் ஆதரவளிக்காது இருக்கும் மாநகர மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் தொடர்பில் தகவல்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவும், சட்டப்பிரிவுடன் ஆராய்ந்து அவ்வாறானவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பது என்றும் அந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது என்று தெரியவருகின்றது. (எ)



# உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு ஜனநாயகத்துக்கு வெற்றி!

## சு.க. பொதுச் செயலாளர் கூறுகிறார்

உயர் நீதிமன்றால் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு நாட்டின் ஜனநாயகத்துக்கும், மக்களின் ஜனநாயக உரிமைக்கும் கிடைத்த பெரும் வெற்றியாகும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நீதிமன்றத்தின் தீர்ப்பையடுத்து பாதுகாப்பான முறையில் பொதுத்தேர்தலை நடத்துவது தொடர்பான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கான ஆலோசனைகள் உள்ளடங்கிய கடிதம் ஒன்றை நாம் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கையளித்துள்ளோம். எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து பெரும் வெற்றியைப் பெறுவதே எமது ஒரே இலக்காகும். கொரோனா வைரஸ் தொற்று ஏற்படும் என்பது முன்னரே எதிர்வுகூறப்பட்டதொரு விடயமாகும். இந்த நெருக்கடிக்கு அரசு காரணம் இல்லை என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். அதைப் போன்று போதைப் பொருள் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச சிறைச்சாலை அதிகாரிகளுடன் சந்திப்பை நடத்தியுள்ளமை வரவேற்கப்பட வேண்டியது. எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமது ஜனநாயக உரிமையைப் பறிக்க முற்பட்ட தரப்புகளுக்கான உரிய பதிலடியை மக்கள் வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111
செய்தி: news@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.06.2020 இல் வெளியிடப்பெற்றது.